
# புதிய ஆட்சி அமைக்கப்பட்டபின்
# பட்டியல் இனத்தவர்க்காக
# தமிழ்நாடு அரசிடம்
# அளிக்கப்பட்ட கோரிக்கைகளின்
# தொகுப்பு

## 25-06-2021

**Dr. R. Christodas Gandhi, IAS (Rtd)**
Former Additional Chief Secretary (TN)
Founder REEDA, PAALAM & AMBU
Email: rcg1952@gmail.com
Mobile: 94440 45215

**Fr.K.John Kumar**
Director
Social Watch - Tamilnadu
Email: kumar@swtn.org
Mobile: 94444 69685



தமிழ்நாட்டில் புதிய ஆட்சி பொறுப்பேற்றுள்ளது. இதை அடுத்து புதிய அமைச்சர்களும், செயலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பொறுப்பேற்றுள்ளனர். பட்டியல் இனத்தவர்க்கு இவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும், பட்டியல் இனத்தவரின் புதிய எதிர்பார்ப்புகள் குறித்தும் இவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர்ந்து கோரிக்கைகளைச் சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடும், 'பாலமும்' அனுப்பி வருகின்றன. இவை பல்வேறு சமூகத் தளங்களிலும் பகிரப்பட்டுள்ளன.

20.06.2021 வரை அனுப்பப்பட்டக் கோரிக்கைகளை இப்போது சிறு கையேடாகக் கொடுத்துப் பல்வேறு தரப்பினர்க்கும் அனுப்புகிறோம். இவற்றுள் அடங்கி உள்ளவை:

1. பட்டியல் இனத்தவர்க்கான பட்ஜெட் பற்றியவை.
2. பழங்குடியினரின் பட்ஜெட் பற்றியவை.
3. போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை பற்றியவை.
4. 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பற்றியவை.
5. பட்டியல் இனத்துறை நடத்தும் பள்ளிகளைச் சீரமைத்தல் பற்றியவை.
6. பழங்குடி நல இயக்ககம் மற்றும் பட்டியல் இனத்துறை நிர்வாகக் கட்டமைப்பைப் புத்தாக்கம் செய்வது பற்றியவை.
7. பணிகளில் பட்டியல் இனத்தவர் பங்கேற்பை உறுதி செய்வது பற்றியவை.
8. பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவது பற்றியவை.
9. உயர் கல்வி வளர்ச்சி காணுதல் பற்றியவை.
10. பட்டியல் இனச் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு அளித்தல் பற்றியவை.
11. பட்டியல் இன அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பட்டியல் இனத்தவர்க்கான பரிவான பணியாற்றுதல் பற்றியவை.
12. பட்டியல் இனத் துறையில் புதிய திட்டங்களை வகுத்தல் பற்றியவை.
13. தாட்கோவைப் புத்தாக்கம் செய்வது பற்றியவை. இன்னும் பல,

பட்டியல் இனத்துறை ஆற்ற வேண்டிய பணிகள் முச்சூடும் இக்கோரிக்கைகளில் அடங்கி விடும்.

இவை முதலமைச்சர், நிதி அமைச்சர், தலைமைச் செயலர், 15 பட்டியல் இனம் சார்ந்த செயலர்கள், பிறதுறைச் செயலர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பட்டியல் இனச் சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன. இன்னும் தொடரும்.

எல்லாத் தளங்களில் இருந்தும் இக்கோரிக்கைகளை, அரசிடம் எடுத்துச் செல்ல வேண்டுகிறோம்.

பொருள் அடக்கம் : பக்கம்



| | | |
|---|---|---|
| 1. மாண்புமிகு. முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு | (2) | – **1 - 11** |
| 2. மாண்புமிகு. ஆதிதிராவிடர் நல அமைச்சர் திருமதி.கயல்விழி செல்வராசு அவர்களுக்கு | (7) | – **12 - 26** |
| 3. மாண்புமிகு. நிதியமைச்சர் அவர்களுக்கு | (3) | – **27 - 32** |
| 4. சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு | (1) | – **33** |
| 5. மாண்புமிகு. கட்சித் தலைவர்களுக்கு | (1) | – **34 - 35** |
| 6. தலைமைச் செயலருக்கு | (2) | – **36 - 38** |
| 7. ஆதி திராவிட நல செயலர்களுக்கு | (7) | – **39 - 53** |
| 8. பிற செயலர்க்கு | (4) | – **54 - 58** |
| 9. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு | (1) | – **59 - 61** |


நம்பிக்கையுடன்,

**சென்னை**

௨௫.0௬.௨0௨௧


**இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப. (ஓய்வு),**
**முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,**
நிறுவனர் - பாலம், அம்பு
மின்னஞ்சல் : rcg1952@gmail.com
அலைபேசி : 9444045215



SW – TN has been taking up advocacy activities regularly with a view to sensitising policy makers. SW – TN has succeeded in eliciting fair responses too. SW – TN's main focus is on development of SCs and STs and Gender Budgeting.

Since March 2020 in view of the Corona lock out, conventional programs like group meetings (Workshops/Seminars) and calling on concerned officers in the Government could not take place. However, SW – TN found alternative online methodologies to carry on advocacy pursuits.

Even during the period of Corona restrictions, SW – TN managed to conduct 2 residential programs for panchayat presidents from Irular (ST) communities on **24,25th October 2020 and 7th November 2020** two different dates.

However, conducting Zoom meetings and communications via whats app were found more timely and much easier for participants.

On 28th February 2020, SW-TN in association with PAALAM and 'Human Rights Advocacy and Research Foundation' organized a "One Day Consultation on LOCAL GOVERNANCE – Training for the newly elected SC/ST Panchayat Presidents" at AICUF, Chennai. On 3rd July 2020, SWTN along with PAALAM, AGAM, ST, Irular Association; organized a Meeting for Irular Tribes Panchayat Presidents at AICUF House, Nungambakkam, Chennai. There were representations across many districts in Tamilnadu.

Mr. Christudas Gandhi IAS (Retd) was the key resource person. On 24th and 25th October 2020, SWTN along with PAALAM, Irular Tribal Foundation organized a Consultation for "Irular Panchayat Presidents" at AICUF House, Nungambakkam, Loyola, Chennai. On 8th November 2020, SWTN hosted the

zoom meeting for a Discussion on 'Pallar Youth Development' a sub community of Scheduled Castes; Key Speaker was Mr.R.Chrisudoss Gandhi IAS (Retd). During December 2020, SWTN along with PAALAM, published a compilation on "UNDISCLOSED FACTS of SC/ST" and circulated among Thousands of Stakeholders. On 4th December 2020, SWTN hosted the zoom meeting for Christudas Gandhi IAS (Retd) to Discuss on "Regularising Temporary Tribal Teachers". On 14th December 2020, SWTN hosted the zoom Discussion with Christudas Gandhi IAS (Retd) on BUDGET ADVOCACY - for the activists at Pondicherry. On 22nd December 2020, SWTN hosted the Zoom webinar on "Initiating Actions to Defend Post Matric Scholarship" – Dialogue with Christudas Gandhi IAS (Retd) to discuss COURSES OF ACTION Forums can undertake. On 30th January 2021, SWTN along with Christudass Gandhi IAS (Retd) organized an online Discussion with Scheduled Tribe Teachers across the State. On 18th May 2021, SWTN along with Christudas Gandhi IAS (Retd) organized a Virtual Discussion in "TRIBAL TEACHER ISSUES".

On 27th May 2021, SWTN and Christudas Gandhi IAS (Retd) organized a Discussion with 'Particularly Vulnerable Tribal Groups- PVTG'. The key concerns discussed were: 1. What schemes to propose for the coming budget? 2. Proposals for PVTG schemes. 3. Issues in implementation of PVTG schemes. 4. Running of Tribal schools by tribes. Ms. Usha, Joint Director of Tribal Welfare Department actively responded to the key concerns raised by the people. All the key Recommendations discussed were submitted to Tribal Welfare Director, Government of Tamilnadu. On 30th May 2021, SWTN hosted the zoom meeting along with Christudas Gandhi for Revenue SC/ST Representatives - to Prepare a Representation on our Demands to the new Government.

On 12th June 2021, SWTN hosted the Zoom meeting along with Christudas Gandhi IAS (Retd Additional Chief Secretary) for Discussing SC/ST Issues in Agricultural University. On 19th June 2021, SWTN hosted the Zoom meeting along with Christudas Gandhi IAS (Retd Additional Chief Secretary) for Discussing SC/ST Issues in Directorate of Technical Education. On 24th June 2021, SWTN will host the Zoom meeting along with Christudas Gandhi IAS (Retd Additional Chief Secretary) for Discussing PVTG Issues in Tamilnadu. On 27th June 2021, SWTN will host the Zoom meeting along with Christudas Gandhi IAS (Retd Additional Chief Secretary) for Revenue SC/ST Representatives - to revise a Representation on our Demands to the new Government.

Since the announcement for the fresh elections were made SW – TN and PAALAM interesified advocacy activities. An appeal to all political parties projecting the SC &ST view points was sent to all party leaders.

This was done already during election campaign period. Thereafter a string of communications to CM, Ministers, MLAs, Secretaries, Collectors and others have been sent covering the whole gamut of SC/ST activities. This will be continued more vigorously now, as the new Government in rule welcomes people's opinions.

Such communications are also broad spread through social media to various social groups imploring for follow up at their levels.

SW – TN also has launched continuous Zoom webinars with various groups like STs, ST Employees, NGOs. The following Zooms have been held since March 2019.

A compilation of communications already sent to policy makers in recent months in a booklet form has been made for wider circulation.

Readers are requested to use this as a ready reckoner.This booklet is also (title) uploaded in our website "www.swtn.org" for pursuing further action at their levels.

**Chennai**
**25.06.2021**

**Fr.K.John Kumar**
**Director**
**Social Watch – TN**
**Email: kumar@swtn.org**
**Mobile No: 94444 69685**

அன்புமிகு திரு. ஸ்டாலின் அவர்களுக்கு,

**வணக்கம். வாழ்த்துகள்.**

வரும் தேர்தலில் வெற்றி அணியாகத் தங்கள் தலைமையிலான அணி அறியப்படுகிறது. வெற்றிக்குப் பிறகு தங்களைக் கொண்டாடக் கூட்டம் ததும்பும். அது சமயம் தங்களிடம் மனம் விட்டுப் பகிர, எங்களுக்கு அவ்வளவு நேரம் கிட்டாது. ஆகவே வெற்றி அணித் தலைவரான தங்களிடம் இப்போதே பட்டியலினம் சார்பான எதிர்பார்ப்புகளைச் சமர்ப்பிக்கிறோம்.

I. முதற்கண் நல்லதொரு அமைச்சரவையை அமைத்து ஆட்சி அமைக்க வாழ்த்துகள். **அமைச்சரவையில் 20 % பட்டியலின அமைச்சர்களை அமர்த்த வேண்டுகிறோம்.** பட்டியல் இனம் சார்ந்த அமைச்சர்களுக்கு அமைச்சரவை வரிசையில் (Warrant of Precedence) முதல் 10 இடங்களுக்குள் வழங்க வேண்டுகிறோம். 30-க்கு மேற்பட்ட அமைச்சர்களைக் கொண்ட தமிழ்நாட்டில் இதுவரைப் பட்டியலின அமைச்சர்களுக்குக் கடைசி 5 இடங்களுக்குள் தான் வரிசை தரப்பட்டுள்ளது. இதை மாற்றி முதல் 10 க்குள் வழங்கத் தங்களை வேண்டுகிறோம்.

பட்டியல் இனத்தவர்க்கு இதுவரை வழங்கப்படாத நிதித்துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித்துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றில் பட்டியலின அமைச்சர்களை அமர்த்த வேண்டுகிறோம்.

II. தங்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளபடி, பட்டியலின மாணவர்க்கான பேணல்படியை (maintenance allowance) குறைந்தது இரு மடங்காக உயர்த்தி வழங்க வேண்டுகிறோம். அதே வேளை போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடைத் திட்டத்தை முழுமையாக அமலாக்கி நடத்தித் தரவும் வேண்டுகிறோம். அவற்றுள் அடங்குவன:

அனைத்து வகைச் சுயநிதிக் கல்லூரியிலுள்ள அனைத்து வகைப் பாடப் பிரிவுகளுக்கும், போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை வழிகாட்டியில், உள்ள படி கட்டணக் குழு தீர்மானிக்கும், கட்டணங்களை முழுமையாக வழங்குதல், அரசு ஒதுக்கீட்டுக்கு வழங்கப்படும் கட்டணத்தை மட்டுமே, பிற ஒதுக்கீட்டுக்கு வழங்கும் நடைமுறையை அகற்ற வேண்டும்.

அ. அரசாணை 51 உம் 52 உம் திரும்பப் பெறப் பட வேண்டும்.

**ஆ. போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை வழிகாட்டியின்படித் தரப்படும் ரூ.14,400 /- பேணல்படியைக் குறைந்தது ரூ.30,000/- ஆக உயர்த்த வேண்டும்.**

தற்போது 60% மைய அரசு பங்கு அளிப்பதால் உயர்த்தப்படும் பேணல் படியைத் தமிழ்நாடு நிதியிலிருந்தே வழங்கலாம். சற்றொப்ப 40,000/ தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்க்கு 40,000*30,000 = ரூ.120,00,00,000/ (ரூ.120 கோடி) மட்டும் தான் கூடுதல் செலவினமாகும்.

இ. கல்லூரி ஆசிரியர்கள் இருவர், மாணவர்கள் ஐவர், கல்லூரி நிறுவனச் செயலர்கள் இருவர், இத்திட்டம் பற்றி அயராது தொண்டாற்றி வரும் அகம், சமூகக் கண்காணிப்பகம் போன்ற சமூக அமைப்புகள், அலுவல்சார் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்டு, ஆதிதிராவிடர் நல இயக்குநர் தலைமையில், பட்டியலின / பழங்குடியின கல்வி மேம்பாட்டுக்கான ஒரு குடி அமர்வுக் குழு காலாண்டுக்கு ஒருமுறை, கூடும் வகை செய்ய வேண்டும்.

III. பட்டியல் இனத் துணைத் திட்டத்தையும், பழங்குடித் துணைத் திட்டத்தையும் வடிவமைக்கவும், செயல்படுத்தவும், ஆதி நலத்துறைக்கு, முழுச் சுதந்திரம் வழங்கப் படவேண்டும். தற்போது இவை நிதித்துறையின், கடுமையான பிடியில் உள்ளன. இத்திட்டங்களின் வடிவமைப்பைக் கீழ்க்கண்டவாறு, மாற்றி அமைக்க வேண்டும்.

அ. மொத்த மாநில வரவிலிருந்து (GSDP) இல் பட்டியலினத் துணைத் திட்டத்திற்கு 2 % மும் பழங்குடித் துணைத் திட்டத்திற்கு 0.1% உம் வழங்க வேண்டும்.

ஆ. பட்டியலினத் துணைத் திட்டம் / பழங்குடித் துணைத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் மைய அரசுத் திட்டங்கள் 50% யைத் தாண்டக் கூடாது. அதே போன்று பிரித்தறியாப் பொதுத் திட்டங்களும் 50% யைத் தாண்டலாகாது.

**இ. மொத்த ஒதுக்கீட்டில் 20% புதிய திட்டங்களாக அமைய வேண்டும்.**

ஈ. ஒதுக்கீடு பெறும் ஒவ்வொரு துறையும் அதனதன் ஒதுக்கீட்டில் 20% யைப் புதிய திட்டங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

உ. ஆண்டாண்டு செலவிடப் பட்ட தொகையை பட்டயக் கணக்காயர் (Account General) தரும் புள்ளி விவரங்களை வைத்து வெளியிட வேண்டும்.

IV. புதிய திட்டங்களை மக்களிடம் இருந்து கோரிப் பெற்று அதை ஆய்விட்டுப் பரிந்துரைக்கப் பட்டியலின / பழங்குடிக்கென்ற தனித் தனி அமைப்புகளை உருவாக்க வேண்டும். திட்ட உருவாக்கம் மற்றும் பரிந்துரை அமலாக்கம் ஆகியவற்றை இக்குழுக்கள் கண்காணிக்கும்.

**V. பட்டியலினத்தவர்க்கு தகவல் பரவலாக்கம் மற்றும் மேம்பாட்டுச் சிந்தனைக்கென பட்டியலினத்தவரே நடத்தும், பத்து (10) மாத / கால முறை இதழ்களுக்கு ஆண்டுக்கு, ஒவ்வொரு இதழுக்கும் ரூ.10 இலட்சத்திற்குக் குறையாத தமிழக அரசின் விளம்பரங்கள் வழங்க வேண்டும்.**

**VI. பட்டியலினத்தவர் கல்வியாளராக, முதலீட்டாளராக / நிறுவனராக இருந்து நடத்தும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் ஆசிரியர் ஊதிய நல்கை (உதவித்தொகை = AID) வழங்கப் படவேண்டும்.** அதற்கு ஆண்டுக்கு உச்சமாக ஆயிரம் ஆசிரியர்களுக்கு, ஊதியம் வழங்கலாம். ஆண்டுக்கு ரூ.100 கோடிக்கு மேல் செலவாகாது. இத்தகைய நிறுவனங்களில் தொடர்ந்து 30 % பட்டியலின/ பழங்குடி மாணாக்கர் படிக்கிறார்கள் என்பது உறுதிபடுத்தப்படுமானால் இந்நிறுவன ஆசிரியர் / ஆசிரியரல்லாத ஊழியர் அனைவர்க்கும் அரசு முழு ஊதியத் தொகை ( AID ) வழங்கலாம்.

VII . ஒவ்வொரு மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரியும், ஆண்டிற்கு இரு முறை, தனியார் தொழில் / வணிக / உற்பத்திச் சந்தை மற்றும் ஆலோசனை (consultancy) நிறுவனங்களை அழைத்துப் பட்டியலின / பழங்குடி மக்களுக்கென சிறப்பான வேலைவாய்ப்பு முகாம்களை, நடத்த வேண்டும்.

VIII. சனவரி மூன்றாவது–நான்காவது வாரங்களில் மகாத்மா காந்தி நினைவு தினத்தையொட்டி, மாவட்டந்தோறும் மனித நேயவார விழா, ஆதிதிராவிடர் நலத் துறையால் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதேபோன்ற மற்றொரு சிறப்பு நிகழ்வை அண்ணல் அம்பேத்கர் வடிவமைத்த அரசியல் சாசனத்தை, நினைவு கூறும் வகையில், அரசியல் சாசனம் அறிமுகப் படுத்தப்பட்ட, குடியரசு நாளான சனவரி 26 – ஐ ஒட்டி நடத்தலாம். இதில், பொதுவாக தமிழகத்திலுள்ள எல்லா மேல் நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் பங்குபெறுவதை உறுதி செய்யவேண்டும். அம்பேத்கரது நூல்கள் பரிசுநூல்களாக, வழங்கப் படல் வேண்டும்.

IX. தற்போதுள்ள வழக்கப்படி, இனச்சான்று சரிபார்க்கும் மாவட்ட மற்றும் மாநிலக் கண்காணிப்புக் குழுக்களுக்கு, எல்லா மனுக்களையும் அனுப்புகிறார்கள். இதற்குப் பதிலாக யாராவது, எதிர்மனு செய்திருக்கும் இனங்கள் மட்டுமே அனுப்பப் படவேண்டும். இயல்பான சான்றிதழ் சரிபார்ப்பு என்பதற்கு, அந்தந்தச் சான்றிதழ் அளித்த அதிகாரி உறுதி செய்தல் போதுமானது.

X. 1996 - 2001 மற்றும் 2006 -2011 தி.மு.க ஆட்சிக் காலத்தில் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்பப் பல்வேறு உறுதிமொழிகளும், நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டன. ஆனால், உறுதியான நியமனங்கள் வெகு சிலவே மேற்கொள்ளப்பட்டன. **வரும் ஆட்சிக் காலத்தில் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்ப, உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுகிறோம்.**

அவையாவன:

அ. மீண்டும் பின்னடைவுப் பணியிடங்களைக் கண்டறியும் கண்துடைப்புக் குழுக்கள் தேவையில்லை. **2006 –2011 இடைப்பட்ட காலத்தில் ஆதிதிராவிடர்**

**நல அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்ட, குழு தந்த புள்ளிவிவர அடிப்படையில் நியமனங்களை, உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.**

ஆ. ஒவ்வொரு துறைச் செயலரும், அவரவரது ஆளுகைக்கு உட்பட்ட துறைகளிலும் (பொதுத் துறைகள் உட்பட) இரண்டு ஆண்டுகளுக்கு, ஒருமுறை பின்னடைவைக் கண்டறிந்து, சிறப்பு நியமனங்களை மேற்கொள்ளும் தொடர் நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பட்ஜெட் தயாரிப்பின் போது அனைத்துத் துறைப் பணியாளர்கள் பற்றிய புள்ளி விவரப் பட்டியல் (number / data statement) அளிக்கப் படுவது போல, அதே பட்டியலில் SC / ST / BC / MBC விவரங்களும் அளிக்கப் பட வேண்டும்.

XI. **அனைத்துப் பட்டியல் / பழங்குடி இனப் பஞ்சாயத்துகளும், நேரடியாக எடுத்துச் செய்யும் சாலைப் பணிகளுக்காக, ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் வழங்கப்பட வேண்டும்.** இதற்காக ஓராண்டுக்குத் தேவைப்படும் ரூ.300 கோடியைப் பட்டியல் இனத் துணைத் திட்டத்தின் கீழ் வழங்கலாம்.

XII. **ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும், மேலும் வலுவாக்கும் வண்ணம் அப்பள்ளிகளை நிர்வகிக்கத் தனி சுய அமைப்பு (autonomous body) ஒன்றை உருவாக்க வேண்டும்.** 5 உயர்நிலைப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களைக் கொண்டே, ஒரு மேலாண்மைக்குழு அமைக்கப் படவேண்டும். சுழற்சி முறையில் அந்த 5 உயர்நிலைப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களில் ஒருவர், குழுத் தலைமை வகிப்பார். மொத்தம் 116 மேல்நிலைப் பள்ளி / 5 = 25 குழுக்கள் அமையும். மாநில அளவில் இந்த 25 குழுத் தலைவர்களைக் கொண்ட மாநில மேலாண்மைக் குழு செயல்படும். இக்குழுத் தலைவர், குழு உறுப்பினர்களால் 5 ஆண்டுக்கு ஒருமுறை, தேர்ந்தெடுக்கப் படுவார். அதே போன்று மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களைக் கொண்ட மற்றுமொரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். ( 87 மேல்நிலைப் பள்ளிகள் / 5 = 17 அல்லது 20)

**XIII. மாவட்ட ஆதி திராவிடர், நல அதிகாரிகளைப் பள்ளி / விடுதி நிறுவனப் பணிகளிலிருந்து, முற்றிலுமாக விடுவிக்க வேண்டும்.** அவர்களுக்குச் சமூகப் பொருளாதாரம், மேம்பாடு தொடர்பான பணிகள் மட்டும் அளிக்கப் படவேண்டும்.

**மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரிகளுக்கு வழங்கப் படவேண்டிய பணிகளாகக் கீழ்க்காணும் ஆறு (6) பரிந்துரைகளை முன் வைக்கிறோம்.**

அ. பள்ளிக் கல்விக்கு மேம்பட்ட போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பற்றிய அகத் தணிக்கையைக் (Internal Audit) கல்லூரிகளில் மேற்கொளல்.

ஆ. பட்டியல் இன மக்கள், 30 % க்கு மேல் வாழும் வருவாய்க் கிராமங்களின் பட்டியலைப் பேணுதல். இவ்வூர்களின் கட்டமைப்புத் தேவைகளை (வீட்டுக் குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு, சாலைகள், கழிவுநீர் அகற்றல் போன்றன). அவ்வப்போது அரசின் பார்வைக்குக் கொண்டுவரல்.

இ. மாவட்ட அளவில் பட்டியல் இனத் துணைத்திட்டம் / பழங்குடித் துணைத் திட்டச் செலவினங்களை ஆண்டுதோறும் ஆய்விட்டு அறிக்கை வெளியிடல்.

ஈ. வெளிநாட்டுக் கல்வி பயில ஆண்டுக்கு, மூவரைத் (3) தேர்ந்தெடுத்து, கல்வி உதவித்தொகை / நல்கை வழங்குதல்.

உ. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் எதிர்மனு (counter FIR) பதிவு செய்யப்பட்ட வழக்குகளையும், தவறான தகவல் (mistake of fact) என்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளையும், ஆய்விட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பல்.

ஊ. மேல் நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், ஆண்டுதோறும் அக்டோபர் திங்களில் அம்பேத்கர் சிந்தனைகள் தொடர்பான கட்டுரைப் போட்டியும், கருத்தரங்கங்களும் நடத்துதல்.

XIV. கீழ்க்கண்ட செயல்பாடுகளுக்கு அறிவர் குழுக்களை அமைக்க வேண்டுகிறோம்.

| செயல்பாடுகள் | அறிவர் |
|---|---|
| பட்டியல் இனத் துணைத் திட்டம் / பழங்குடித் துணைத் திட்டம். | இரா.கிருத்துதாசுகாந்தி,இ.ஆ.ப(ஓய்வு), முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர். |
| வன்கொடுமைத் தடுப்புச் சட்டம். | திருவாளர். ஹென்றி டி'.பேன் |
| ஆதி திராவிடர் நல, மேல்நிலைப் பள்ளிகளை வளப்படுத்துதல். | பேராசிரியை. அரங்கமல்லிகா. |
| 2006, பழங்குடி வன உரிமைச் சட்ட நடைமுறை. | செல்வி. ஷோபா (ஊட்டி). |

XV. தமிழ்நாட்டில் பட்டியல் இன அரசுப் பணியாளர் சங்கங்களுக்கு, ஏற்பளிப்பு செய்து, அரசுகளுடன் முறையான பேச்சு வார்த்தைகளில், கலந்து கொள்ளச் செய்தல்.

XVI. தமிழ்நாடு அரசு ரூ.6 இலட்சம் கோடிக் கடனில் தத்தளிக்கிறது. **இதை மாற்றும் வண்ணமாக, இந்தக் கடன்கள் முழுமையாக அடைபடும் மட்டும் புதிய கடன்களை வாங்காமல், அரசு செயல்பட வேண்டும்.** "பற்றாக்குறை பட்ஜெட்"யைப் போடாமல் இருந்தாலே 5–6 ஆண்டுகளில் இக்கடன்களைத் தீர்த்து விடலாம்.

**இரா.கிருத்துதாசுகாந்தி இ.ஆ.ப (ஓய்வு),**
**முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,**
rcg1952@gmail.com
**9444045215**

**அருட்பணி. ஜான்குமார்,**
**இயக்குநர், சமூகக்கண்காணிப்பகம்,**
**தமிழ்நாடு, சென்னை,**
**நுங்கம்பாக்கம்.**

# SOCIAL WATCH - TAMILNADU

தேதி: 6.5.2021

பெறுநர்,

மாண்புமிகு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

முதலமைச்சர், தமிழ்நாடு

புனித ஜார்ஜ் கோட்டை,

சென்னை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,

தங்களது தலைமையில் தமிழகம் புது வளர்ச்சி காண வாழ்த்துகிறோம்.

தி.மு.க. பட்டியல் இனத்தவர்க்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை ஆறு திங்களுக்குள் நிறைவேற்றித் தரத் தங்களை அன்போடு வேண்டிக் கொள்கிறோம். (இணைப்பு II)

அதே வேளை ஒரு சிறு பட்ஜெட்டில் (ரூ.10 கோடி மட்டும்) பட்டியல் இனத்தவர் ஆளுமை பெறத்தக்கப் பத்து சிறுசிறு திட்டங்களைப் பற்றிய பரிந்துரைகளை இத்துடன் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். (இணைப்பு I) இவற்றையும் நிறைவேற்றித் தரத் தங்களை அன்போடு வேண்டுகிறோம்.

வாழ்த்துக்களுடன்,


திரு.இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலர் (தமிழ் நாடு)
நிறுவனர் – பாலம், அம்பு
மின்னஞ்சல்: rcg1952@gmail.com
அலைபேசி: 94440 45215

திரு. ஜான் குமார்,
இயக்குனர்,
சமூகக் கண்காணிப்பகம் – தமிழ் நாடு,
மின்னஞ்சல்: kumar@swtn.org
அலைபேசி: 94444 69685





202, Chitra Avenue, Shopping Inn, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. Tamil Nadu, India.
Phone : 0091 - 44 - 2374 6044, E-mail : krisjkumar2000@gmail.com Web : www.swtn.org

**பட்டியல் இனத்தவர்க்கு ரூ.10 கோடிக்கான பத்துத் திட்டங்கள்:**

**I.நூல் பதிப்புக்கான கொடை:** தற்போது 11 பட்டியலின எழுத்தாளர்க்கு (ஒருவர் பட்டியலினம் சாராதவர்) புதிய நூல் படைப்பதற்காக ரூ.40,000 வழங்கப் படுகிறது. இதைச் சற்று மாற்றி 38 மாவட்டங்களுக்கு ஒருவராக 38 பட்டியல் இனத்தவர்க்கும் 2 பட்டியல் இனம் அல்லாதவர்க்கும் ஆண்டு தோறும் ரூ.1 இலட்சம் கொடை வழங்கலாம். ஆண்டுச் செலவு ரூ.40 இலட்சம்.

**II.இளநிலை / முதுகலைப் படிப்புகளில் பல்கலைக் கழகப் பதக்கம்** பெறும் பட்டியலின மாணவ மாணவியர் அல்லது அவர்தம் பெற்றோர்க்கு தொழிற்கடன் பெறுவதற்கு ரூ.10 இலட்சம் மானியம் தரலாம். மாநிலத்தில் மொத்தம் 10 பேருக்கு ஆண்டுதோறும் இக்கொடையை வழங்கலாம். செலவினம் ரூ.1 கோடி.

**III.வனங்களில் ஒடுங்கிய பகுதிகளில் உள்ள, 30 பழங்குடிக்** குடியிருப்புகளைத் தேர்வு செய்து அங்கு தாய் / சேய் நலம் காக்க அவ்வூரிலேயே 12 ஆம் வகுப்பிற்கு மேல் படித்த பழங்குடிப் பெண்டிர்களை "நலமி" (நலம் விரும்பி) ஆக நியமிக்கலாம். 1 முதல் 5 வகுப்பு வரை பாடம் எடுத்தல், குழந்தைகள் நல மையம் நடத்துதல், பெண்களுக்கான திட்டங்களை நடத்துதல் ஆகிய பொறுப்புகளை இவர்கள் மேற்கொள்வர். மாதம் ரூ.20,000 வழங்கலாம். செலவினம் ரூ.20,000*30 நலமி = ரூ.6 இலட்சம் * 12 மாதம் = ரூ.72 இலட்சம் ஆண்டுக்கு.

**IV.பட்டியலின ஓவியர்களும், கலைப் படைப்பாளிகளும்** ஓவியக் கலைக் கண்காட்சிகள் நடத்தவதற்கு, கண்காட்சி அரங்கு வாடகையாக, ஒரு நாளைக்கு ரூ.10,000 வீதம் 200 நாட்களுக்குக் கொடை வழங்கலாம். செலவு 200 நாள் * ரூ.10,000 = ரூ.20,00,000 ஆண்டுக்கு. மாநிலத்தில் எங்கும் நடத்தலாம்.

**V.பட்டியலின ஓவியர்களும், கலைஞர்களும்** வெளிநாட்டில் நடக்கும் கண்காட்சிகளில் பங்கு பெறுவதற்காக உச்சமாக ரூ.5 இலட்சம் வீதம் 20 கலைஞர்களுக்குக் கொடை வழங்கலாம். செலவினம் ரூ. 1 கோடி ஆண்டுக்கு.

**VI.பட்டியல் இனத்தவரால் நடத்தப்படும்,** (மூன்று ஆண்டுகளுக்கு மேல் வெளி வரும் அல்லது வெளி வந்த) கால முறை இதழ்களுக்கு, ஆண்டுக்கு ரூ.5 இலட்சம் அளவிற்கு அரசு விளம்பரங்கள் தரலாம். இது போல் 20 இதழ்களுக்கு வழங்கலாம். ரூ.5 இலட்சம் * 20 = ரூ.1 கோடி.

**VII.**38 மாவட்டங்களிலும் ஆண்டுக்கு இரண்டுமுறை பட்டியலின/ பழங்குடியினர்க்கான **தனியார் வேலை வாய்ப்பு முகாம்களை** மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பட்டியலின அமைப்புகளுடன் இணைந்து நடத்த வேண்டும். 20 தனியார் நிறுவனங்களை அழைப்பது, மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பாகும். பட்டியலின அமைப்புகள் போட்டியாளர்களை அழைத்து வரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். குறைந்தது 20 தனியார் நிறுவனங்களும், 800 போட்டியாளர்களும் பங்கு பெறும் வகையில் முகாம் அமைய வேண்டும். இரண்டிரண்டு மாவட்டங்களாக இணைந்து நடத்துவது சிறப்பு. 38 * 2 = 76 முகாம்கள் நடத்துவதற்கு முகாமிற்கு ரூ.1 இலட்சம் செலவினமாக வழங்கலாம். மொத்த செலவினம் ரூ. 76 இலட்சம்.

**VIII.பட்டியலினப் படைப்பாளிகள் குறும்படங்கள் தயாரிப்பதற்காக**, ஆண்டிற்குப் பத்துப் பேருக்கு ரூ.10 இலட்சம் வீதம், கொடையாக வழங்கலாம். ஆண்டுச் செலவு, ரூ.10 இலட்சம் * 10 படைப்பாளிகள் = ரூ.1 கோடி.

**IX.நிலமில்லாப் பட்டியல் இனத்தவர் பிறர் நிலங்களை ஒத்தி** எடுத்து, வேளாண்மை செய்ய ஆண்டுக்கு ஒருவர்க்கு ரூ.1 இலட்சம் என 200 பேர்களுக்கு நிதி வழங்கலாம். இதில் ரூ.50,000 மானியமாகவும், மீதி வட்டி இல்லாக் கடனாகவும் வழங்கப் படலாம். ஆண்டுச் செலவு ரூ. 50,000 மானியம் * 200 பயனாளிகள் = ரூ. 1 கோடி.

**X. BE படித்து முடித்து விட்டு 5 ஆண்டுகளுக்கு மேல் நிரந்தர ஊதியம் இல்லா** பட்டியல் இனப் பட்டதாரிகளுக்குக் கோழிப் பண்ணை அமைக்க ரூ.5 இலட்சம் மானியம் வழங்கலாம். இவ்வாறு 58 பேர்களுக்கு வழங்கலாம். இப்பண்ணைகளின் முட்டைகளில் 60 % சத்துணவு மையங்களுக்கு வாங்கப் படலாம். ஆண்டுச் செலவினம் ரூ.5,00,000 * 58 = ரூ. 2.90 கோடி.

## பட்டியல் இனத்தவர்க்கு ரூ.10 கோடிக்கான பத்துத் திட்டங்கள்:

| வ.எண் | திட்டங்கள் | ஆண்டுச் செலவு ரூ.கோடி |
|---|---|---|
| 01 | நூல் பதிப்பு | ரூ.0.40 கோடி |
| 02 | பதக்கம் பெற்ற மாணவியருக்குத் தொழிற் கடன் | ரூ.1.00 கோடி |
| 03 | 30 பழங்குடி நலமி நியமனம் | ரூ.0.72 கோடி |
| 04 | ஓவியக் கண்காட்சி | ரூ.0.20 கோடி |
| 05 | வெளி நாட்டுக் கண்காட்சி | ரூ.1.00 கோடி |
| 06 | இதழ்களுக்கு விளம்பரம் | ரூ.1.00 கோடி |
| 07 | தனியார் வேலை வாய்ப்பு முகாம் | ரூ.0.76 கோடி |
| 08 | குறும்படங்கள் தயாரித்தல் | ரூ.1.00 கோடி |
| 09 | குத்தகை வேளாண்மை | ரூ.1.00 கோடி |
| 10 | கோழிப் பண்ணை அமைத்தல் | ரூ.2.90 கோடி |
| | **மொத்தச் செலவு** | **ரூ.9.98 கோடி** |

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
rcg1952@gmail.com
9444045215

# SOCIAL WATCH - TAMILNADU

இடம் : சென்னை
தேதி : 11.5.21

பெறுநர்:

மாண்புமிகு. கயல்விழி செல்வராஜ் அவர்கள்,
அமைச்சர், ஆதிதிராவிடர் நலத்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு,

ஆதிதிராவிடர் நலத்துறைக்கு அமைச்சர் ஆனமைக்கும் தமிழக அமைச்சரவையில் இரு பெண் அமைச்சர்களில் நீங்கள் ஒருவராக வந்தமைக்கும் எங்களது மலர்ச்சியான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் மற்றும் பெண்டிர் முன்னேற்றத்தில் உங்களுடன் இணைந்து பணியாற்ற முனைப்போடு உள்ளோம்.

வாழ்த்துடன்.

இரா.கிருத்துதாசுகாந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர் - பாலம்,அம்பு
மின்னஞ்சல்: rcg1952@gmail.com
அலைபேசி: 9444045215

அருட்பணி.கி.ஜான்குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம்-தமிழ்நாடு
மின்னஞ்சல்: kumar@swtn.org
அலைபேசி: 9444469685



202, Chitra Avenue, Shopping Inn, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. Tamil Nadu, India.
Phone : 0091 - 44 - 2374 6044, E-mail : krisjkumar2000@gmail.com Web : www.swtn.org

06/06/2021,
சென்னை.

விடுநர்:

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓ),
மேனாள் கூடுதல் தலைமைச் செயலர்,
G-18/2 TAISHA, விருகம்பாக்கம்,
சென்னை -98.

பெறுநர்:

திருமதி. கயல்விழி செல்வராஜ் அவர்கள்,
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்,
தமிழ்நாடு அரசு.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு,

தாங்கள் துறை அதிகாரிகளுடன் விரைந்து ஆய்வு மேற்கொண்டமைக்குத் தங்களைப் பாராட்டுகிறோம்.

தங்கள் முன் இருக்கும் சவால்களை கீழே சுட்டிக்காட்ட விழைகிறோம். இந்தச் சவால்களை வெற்றியோடு எதிர்கொண்டு பட்டியல் இனத்தவர்க்கு உரிய நீதியை நீங்கள் நிலை நாட்டுவீர்கள் என்று உறுதியோடு நம்புகிறோம்.

1).பட்டியல் பழங்குடித் திட்டங்களுக்காக ஆண்டாண்டு ஒதுக்கப்படும் சற்றொப்ப ரூ 15,000/- கோடி ரூபாயில் 70% க்கு மேல் மைய அரசுத் திட்டங்களுக்கு மடை மாற்றப்படுவதை இவ்வாண்டிலிருந்து நிறுத்த வேண்டும். (DAPSC & DAPST).

2). கடந்த பல ஆண்டுகளாக வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் வழக்கு பதியப்பட்ட பின் (FIR) குற்றத்தாள் (Charge-Sheet) வனையப்படாமல் 50% க்கு மேற்பட்ட வழக்குகள் மெய்த்தன்மை அற்றது (Mistake of Facts) எனத் தள்ளுபடி செய்யப்படும் காவலரது நேர்மை அற்ற செயற்பாடுகளை இவ்வாண்டிலிருந்து முற்றுமாகக் களைய வேண்டும்.

3). அதே போன்று வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் பட்டியல் இனத்தவரால் தரப்படும் புகார்களில் காவல்துறையால் எதிர்மனுக்கள் பெறப்படுகின்றன. 100க்கு 100 சதவீதம் எதிர் மனுக்களில் (Counter Cases) வழக்குகள் பதியப்படுகின்றன. காவல்துறையின் இந்த சூசகமான கையாளுகை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

4) சற்றொப்ப 2 லட்சம் பட்டியல் இன மாணவர்கள் கல்விக் கொடை பெறுவதைத் தடுத்து, அத்தனை பேரும் கல்வியைக் கைவிட்டமைக்குக் காரணமாக இருந்த அரசாணை 51 மற்றும் 52 (ADW Dt:11/08/2017) ஐ உடனே விலக்கம் செய்து, பட்டியல் இன உயர்கல்வியில் மறுமலர்ச்சியைக் கொண்டுவர வேண்டும்.

வாழ்த்துக்களுடன்,

6/6/21

இரா. கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓ),

9444045215,

rcg1952@gmail.com

12/06/2021,
சென்னை.

விடுநர்:

இரா.கிருத்துதாசு காந்தி இ ஆ ப (ஓ),
G.18/ 2 TAISHA,
விருகம்பாக்கம்,
சென்னை- 98.

பெருநர்:

திருமதி கயல்விழி செல்வராஜ் அவர்கள்,
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்,
தமிழநாடு அரசு.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வணக்கம்,

தாட்கோ தமிழ்நாடு மாநில அரசால் 1970 களில் துவக்கப்பட்டது. இது மாநில ஆட்சியின் சுய உருவாக்கம். தேசியப் பட்டியல் இனக் கழகம் 1990 களில் தான் உருவாக்கப்பட்டது. SCA (Special Central Assistance)எனும் தனி ஒன்றிய உதவி 1980 களில் உருவானது.

தாட்கோவில் இருவிதமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒன்று தொழில் தொடங்குவதற்கான கடன் திட்டங்கள், இரண்டு ஆதிதிராவிடர் நலத்துறையின் கட்டுமானப் பணிகளை (பள்ளி+விடுதிக் கட்டிடங்கள்) மேற்கொள்ளுதல்.

கட்டுமானப் பணிகளுக்கான நிதி மாநில பட்ஜெட்டிலிருந்து வழங்கப்படுகிறது. ஆண்டுக்கு சற்றொப்ப ரூ 50 கோடிகளுக்கு மிகாத அளவு கட்டுமானப் பணிகளைத் தாட்கோ ஆண்டாண்டு மேற்கொண்டு வருகிறது.

கடன் திட்டங்களுக்காக மைய அரசு வழங்கும் SCA நிதி தாட்கோவிற்கு அப்படியே வழங்கப்படுகிறது. 2019 இல் இது ரூ.47.99 கோடியாக இருந்தது. (அ.ஆ.19/ஆதி.ந/25-2-2019) இந்தத் தொகை விளிம்புத் தொகையாகப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு, இதற்கு 3 அல்லது 4 மடங்கு கடன், வங்கிகளால் அளிக்கப்படுகிறது.

அப்படி எனில் ஆண்டாண்டுக்குச் சற்றொப்ப ரூ.150 முதல் ரூ. 200 கோடிக்கு மிகாத கடன் திட்டங்களைத் தான் தாட்கோ நடத்தி வருகிறது எனலாம். இது ஒரு பெரிய தொகை அல்ல. கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகப் பட்டியல் இனத்தவர்க்கு வழங்கப்படவேண்டிய வட்டி இல்லா பயிர்க்கடன் ரூ.800 - ரூ.1000 கோடி ரூபாயாக உள்ளது. தமிழ்நாட்டில் வங்கிகள் அளிக்கும் கடன் தொகையின் அளவு ஆண்டுக்கு ரூ.4 -5 லட்சம் கோடிகளைத் தொடுகிறது.

தாட்கோ மாநில அரசால் உருவாக்கப்பட்டது எனினும், ஒன்றிய நிதியான SCA ஐத் தாட்கோவிற்கு வழங்குவது என்ற ஒரு தவறான முடிவால், தாட்கோ தன்னிச்சையான கொள்கைகளை உருவாக்க முடியாமல் சற்றொப்ப 40 ஆண்டுகள் மைய அரசின் விரிவாக்கப் பணியாளராக மாறிப்போனது. இதனால் தாட்கோவின் வீச்சு விரியாமல் போயிற்று.

1. SCA தொகைக்கு மேல் சிந்திக்காமல் சுருங்கிப் போனது.

2. SCA விதிகளின்படி பயனாளிகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு கடனளவை உயர்த்த முடியாமல் போனது.

3. தாட்கோ வெறுமனே ரூ.1 லட்சம் ஆண்டு வருமானம் உள்ளவர்க்கு மட்டுமே எனத் தனக்குத் தானே சுருக்கிட்டுக் கொண்டது.

இவ்வாறு பலப்படக் கூறிக்கொண்டே செல்லலாம். இதிலிருந்து மாறவேண்டும் என்பது இப்போது காலத்தின் கட்டாயமாக்கப்பட்டு விட்டது. 2021- 22 இலிருந்து SCA திட்டம் ஒன்றிய அரசால் நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே தாட்கோ தமது சொந்தப் பணத்தில் அல்லது மாநில அரசு தரும் நிதியில் தான் செயலாற்ற முடியும். SCA க்குப் பதிலாக மீண்டும் அதே அளவு தொகையைத் தாட்கோவிற்குத் தருவது உசிதமல்ல. பின் எவ்வளவு தரலாம்?.

தமிழ்நாடு பட்டியல் இனத் துணைத் திட்டத்தில் மொத்தம் ரூ.15000/- கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. ஆகவே அதிலிருந்து ரூ.1000/- கோடியை மாநில அரசு தாட்கோவிற்கு வழங்கலாம். இந்த ரூ.1000/- கோடியை 30% விளிம்புத் தொகை மானியமாகக் கொண்டு சற்றொப்ப ரூ.3,300/- கோடி கடன்களை பட்டியல் இனத்தவர் பெறமுடியும்.

தாட்கோவை வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்களுக்கு மட்டுமான நிறுவனமாகச் சுருக்கக்கூடாது. அதன் தலையாய நோக்கமே தொழில் முனைவோரை ஊக்குவிப்பதே. தொழில் வகைகள் குறு (Micro), சிறு (Small), மத்தி (Medium), பெரு (Large) எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றின் முதலீட்டு அளவுகளாவன

| | தொழில் | முதலீடு (Investment) ரூ. கோடி | விற்றுக் கொள்முதல் (Turn over) ரூ. கோடி |
|---|---|---|---|
| 1 | குறு (Micro) | 1 | 5 |
| 2 | சிறு (Small) | 10 | 50 |
| 3 | மத்தி (medium) | 50 | 250 |
| 4 | பெரு (Large) | வரம்பில்லை | வரம்பில்லை |

தாட்கோ மத்தி, பெரு ஆகிய எல்லைக்குள் செல்ல வேண்டுவதில்லை. பயனாளி வகைகளை மூன்று விதமாகப் பிரித்துக் கொள்ளலாம்.

1. போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடைக்கு வகுக்கப்படும் வருமான எல்லைக்குள் வருவோர்க்கு (ரூ. 2.5 லட்சம்/ஆண்டு) குறு தொழில் கடன் வழிவகை செய்து தரப்படலாம். ரூ.1000/- கோடியில் 1/3 பங்குத்தொகை இவர்களுக்கு ஒதுக்கப்படலாம். ரூ.5 லட்சத்திற்கு குறையாத மானியமும் ரூ.15 லட்சத்திற்கு குறையாத 'திட்ட முழுத் தொகையும்' (Project Cost) வழங்கப்படலாம். தலைக்கு ரூ 5 லட்சம் எனில் ரூ. 330/- கோடிக்கு (1/3 பங்கு) சற்றொப்ப 6600 - 7000 பயனாளிகள் வருவர்.

2. வருமான வரம்பின்றி குறு தொழில் முனைவோர்க்கு 30% மானியம் வழங்குதல். இந்தப் பிரிவினர்க்கு ரூ.1000/- கோடியில் 1/3 பங்குத்தொகை வழங்கப்படலாம். இதனால் மற்றுமொரு 6600 - 7,000 பேர் பலனடைவர்.

3. வருமான வரம்பின்றி சிறுதொழில் முனைவோர்க்கு 30% மானியம் வழங்குதல். இந்தப் பிரிவினர்க்கு ரூ.1000/- கோடியில் 1/3 பங்குத்தொகை வழங்கப்படலாம். ரூ.30

லட்சம் மானியத்தில் ரூ.330/- கோடிக்கு 1000 சிறு தொழில் முனைவோரை உருவாக்கலாம்.

அடுத்து தாட்கோ, பொதுவான நலத்திட்டங்களுக்கு இருக்கும் பயனாளித் தேர்வு முறைகளைக் கைவிடவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலோ அல்லது வேறு எந்தத் தேர்வுக் குழுவோ அமைக்கத் தேவையில்லை. ஒவ்வொரு மாவட்ட மேலாளரும் ஒரு வங்கி மேலாளர் போலத் தனித்து செயல்படலாம். அனைத்துப் பலன்களும் வங்கிக் கடன் மூலமாகவே இணைக்கப்படுவதால், பயனாளிகளைத் தேர்வு செய்து வங்கிகளுக்குப் பட்டியலை அனுப்புவது என்பதைத் தவிர்த்து, வங்கிகளே நேரடியாகப் பயனாளிகளைத் தாட்கோவிற்கு அனுப்பலாம். அல்லது பயனாளிகளே வங்கிகளின் இசைவைப் பெற்றுத் தாட்கோவை அணுகலாம். இதனால் தேவையற்ற அல்லது முனைப்பு இல்லாதவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுவதும் அவை கழிக்கப்படுவதும் இல்லாமல் போகும்.

தாட்கோ ஆண்டுக்கு சற்றொப்ப 15,000 பயனாளிகளை உருவாக்குவது பெரிய செயல்பாடாகும். வெறும் ரூ 200/- கோடி கடன் தொகையை (ரூ 50 கோடி மானியம்) ஒரு லட்சம் பயனாளிகளுக்குத் தலைக்கு ரூ 20,000/- பெறவைக்கும் இன்றைய நடைமுறை முற்ற முழுக்க நோக்கமில்லா அணுகுமுறையாக உள்ளது.

ஆகவே இவற்றை மனதில் கொண்டு தாட்கோவைச் சீர்திருத்தம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறோம்.

வாழ்த்துடன்,

இரா.கிருத்துதாசு காந்தி IAS (ஓ),
மேனாள் கூடுதல் தலைமைச் செயலர்,
9444045215,
rcg1952@gmail.com

இடம்: சென்னை,
தேதி: 14.6.2021

பெறுநர்:

மாண்புமிகு. கயல்விழி செல்வராஜ் அவர்கள்,
அமைச்சர், ஆதி திராவிடர் நலத்துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு,

தாங்கள் பட்டியல் இனத்துறைக்கு அமைச்சர் ஆனமைக்கு மலர்ச்சியான வாழ்த்துக்கள்.

தங்களது காலத்தில் இத்துறை புது மலர்ச்சியும், வளர்ச்சியும் காண விழைகிறோம். அதற்காகக் கடந்த 20 ஆண்டுகள் பின்னோக்கிப் பார்த்துச் சீர்திருத்தங்கள் கொண்டு வர வேண்டி உள்ளது.

1. கடந்த 20 ஆண்டுகளில் ஆதி திராவிடர் நலத்துறையில் புதிய திட்டங்கள் ஏதும் புகுத்தப் பட வில்லை. (Ph.d பயில்பவர்க்குக் கல்விக் கொடை என்ற திட்டம் தவிர).

2. மாறாக, நில எடுப்புத் திட்டங்கள், வீட்டுமனை வழங்குதல், 10 வது, 12 வது வகுப்பில் முதன்மை வரும் மாணாக்கர்க்குப் பரிசு வழங்கல், தொழில் முனைவோர்க்கான பயிற்சித் திட்டம், சமத்துவபுரம் போன்ற பல திட்டங்கள் கைவிடப் பட்டுள்ளன.

3. இத்துறையின் அமைச்சர், செயலர், இயக்குநர், மாவட்ட ஆதி திராவிடர் அளவில் மக்கள் தொடர்புக் கூட்டங்கள் நடத்தப் படவே இல்லை.

4. பட்டியல் இனத் துணைத் திட்டம், பழங்குடி இனத் துணைத் திட்டம் இவற்றைத் தயாரிப்பதில் ஆதி திராவிடர் நல அமைச்சருக்கும், செயலருக்கும் வெறும் பெயரளவில் தான் பங்களிப்பு இருந்தது.

5. இத்துறைப் பள்ளிகளின், மாணவர் சேர்க்கை 60 % க்கு மேல் சரிந்துள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு, இத்துறையை நவீனமாக்கத் தங்களை வேண்டிக் கொள்கிறோம்.

இத்துறையில் நவீனத்துவத்தைப் புகுத்துவதற்கு இத்துறை அதிகாரிகளை மட்டும் நம்பிப் பயன் இல்லை; இவர்கள் யாவரும் பட்டியல் இனத்தவரைப் பற்றிய ஆழ்ந்த விவரம் இல்லாதவராகவே உள்ளனர். 2 ஆண்டுகளுக்கு மேல் இத்துறையில் தொடர்ந்து, எவரும் பணியாற்றுவதில்லை. பட்டியல் இனத்தைச் சார்ந்த ஒருவர் செயலர், இயக்குநர், மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரிகளாகப் பணி ஏற்றாலும், பட்டியல் இனத்தவர் என்று தம்மை அடையாளப் படுத்திக் கொள்ள நாணப் படுகிறார்கள்.

ஆகவே, பட்டியல் இனப் பற்றாளராக உள்ளவர்களைக் கொண்ட 5-10 அறிவர் குழுக்களை அமைத்து, அவர்கள் மூலமாகப் பொது மக்கள் கருத்துக்களைத் தொகுத்து, புதிய நவீனத் திட்டங்களுக்குப் பரிந்துரைகள் பெறத், தங்களை அன்போடு வேண்டிக் கொள்கிறோம்.

ஏற்கனவே இது குறித்து மாண்புமிகு. முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ள கோரிக்கை நகல்களை இத்துடன் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

1. போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை.
2. பட்டியல் இனத் துணைத் திட்டம்
3. பள்ளிகளைச் சீரமைத்தல்
4. சமத்துவபுரப் புத்தாக்கம்
5. தாட்கோ புத்தாக்கம்

ஆகியவற்றிற்கு முன்னுரிமை தர அன்போடு வேண்டுகிறோம். இவை குறித்துத் தங்களோடு கலந்துரையாட ஒரு மணி நேரம் ஒதுக்கித் தரவும் வேண்டுகிறோம்.

வாழ்த்துடன்.

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர்-பாலம், அம்பு – தமிழ்நாடு,
மின்னஞ்சல்: rcg1952@gmail.com
அலைபேசி: 9444045215

அருட்பணி.கி.ஜான்குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம்,
மின்னஞ்சல்: kumar@swtn.org
அலைபேசி: 9444469685

14/06/2021
சென்னை.

விடுநர்:

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப(ஓ),
G 18/ 2 TAISHA,
விருகம்பாக்கம்,
சென்னை- 98.

பெருநர்:

திருமதி. கயல்விழி செல்வராஜ் அவர்கள்,
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்,
தமிழநாடு அரசு.
கோட்டை, சென்னை.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ,

வணக்கமும் வாழ்த்துகளும்,

2019-2020 க்கான உயர்கல்வி புள்ளிவிவரங்கள் ஒன்றிய அரசால் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

பட்டியல் இனத்தவரைப் பற்றி இதில் பார்க்க வேண்டிய புள்ளிவிவரம், சேர்க்கை விகிதம் (GER - Gross Enrolment Ratio) பற்றியது.

தமிழ்நாட்டு மொத்த GER புள்ளிகள் எப்போதும் தேசிய மொத்தப் புள்ளி விவரத்தை விடவும் சற்றொப்ப இரு மடங்கு கூடுதலாகவே கடந்த காலங்களில் இருந்து வந்துள்ளது. இவ்வாண்டும் அவ்வாறாகவே உள்ளது. 2019 - 20 தேசிய GER 27%; தமிழ்நாடு GER 51.4 %.

அதேபோன்று தேசியப் பட்டியல் இனப் புள்ளிகளை விடத் தமிழ்நாட்டுப் பட்டியல் இனப் புள்ளி இரண்டு மடங்காகவே இருந்து வந்துள்ளது.

ஆனால் 2019-20 இல் தமிழ்நாட்டுப் பட்டியல் இன GER இல் இறங்கு முகம் ஏற்பட்டுள்ளது. இந்த 39.6% என்பது தேசியப் பட்டியல் இனப் புள்ளியை (23.4%) விடவும், ஏன் தேசிய மொத்த மாணவரது புள்ளியை விடவும் (27.1%) கூடுதலானது எனச் சிலர் சமரசம் செய்யலாம். ஆனால் தமிழ்நாட்டில் 2012 க்குப் பிறகு 2017 வரை 42.1 புள்ளிகளாகக் கூடிவந்த GER புள்ளி, 2019 - 20 இல் 39.6% ஆகச் சரிந்துள்ளது. ஆனால் அதே காலகட்டத்தில் தமிழ் நாட்டின் பொதுப் புள்ளி கூடியுள்ளது. பட்டியல் இனத்தவர்க்கு எத்தனை புள்ளிகள் சரிந்தனவோ அத்தனை புள்ளிகள் பொதுவில் கூடியுள்ளது. இது எதைக் காட்டுகிறது ?.

இந்த இடைப்பட்ட மூன்று ஆண்டுகளில் பட்டியல் இனத்தவர்க்குப் போகவேண்டிய 4% இடங்களையும் சேர்த்து மொத்தம் 8% இடங்கள் மற்றவர்க்கு வழங்கப்பட்டுள்ளன.

இது எவ்வாறு தமிழ்நாட்டில் நடந்தது?. யார் காரணம்?.



21

இது நிகழ்ந்ததற்கு முழு முதற்காரணம் பட்டியல் இனத்தவர்க்கான போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை தடைபட்டது தான். இதைத் தடை செய்தது யார்?

அந்நாள் நிதிச் செயலரும் தலைமைச் செயலருமாய் இருந்த சண்முகம் IAS தான் போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடையைக் குலைத்தவர். செல்வி.செயலலிதா உயிரோடு இருந்தபோது நிதிச் செயலராக இருந்த சண்முகம் செய்த சில்மிஷம் செல்வி.செயலலிதாவால் முறியடிக்கப்பட்டது. ஆனால் அவரது மறைவுக்குப் பிறகு நிதி அமைச்சராக இருந்த பன்னீர்செல்வமும், முதலமைச்சராக இருந்த சண்முகம் மாவட்டத்துக்காரரான எடப்பாடி பழனிச்சாமியும், சண்முகத்தின் வார்த்தைகளை மீறாதவர்களாக இருந்தனர். திரு.செ.கு.தமிழரசன், திரு.திருமாவளவன் போன்றவர்களெல்லாம் இவ்விருவரையும் நேரில் கண்டு எடுத்துச்சொல்லியும் சண்முகத்தை மீறித் தம்மால் ஏதும் செய்வதற்கில்லை எனக் கைவிரித்தவர்கள் இவ்விருவரும்.

இவர்கள் திட்டமிட்டபடியே பட்டியல் இனத்தவரது சேர்க்கை சரிந்தது. இதைத் தெரிந்தே செய்ததுதான் 'இம்மூவரணிக் கூட்டம்'. இதை எதிர்கொள்ளத் திராணி அற்று சப்பாணியாக இருந்தனர் அந்நாள் ஆதி நல அமைச்சரும், செயலரும்.

இப்போது ஆட்சிக் கட்டிலில் ஏறி இருக்கும் புதிய அரசு, பட்டியல் இனத்தவரின் சேர்க்கை விகிதத்தை மீண்டும் ஏறுமுகமாகக் கொண்டு வரவேண்டும். ஒன்றிய அரசு வழங்கும் போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை, GER வளர்ச்சியோடு 2021 இலிருந்து இணைக்கப்பட்டுள்ளது. GER ஏறினால் கொடை வரும்; சரிந்தால் வராது.

வரும் சட்டமன்றத்தில் இதற்கான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, தக்க நடவடிக்கைகள் எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறோம்.

தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதியின் படி அ.ஆ 51 & 52, ஆதி.ந.11/8/2017ஐ உடனே ரத்து செய்க. பேணல் படியை இரண்டு மடங்காக உயர்த்துக.

வாழ்த்துடன்,

இரா.கிருத்துதாசு காந்தி IAS(ஓ),
மேனாள் கூடுதல் தலைமைச் செயலர்
9444045215,
rcg1952@gmail.com

தேதி: 14.06.2021

விடுநர்:

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர்-பாலம், அம்பு
சென்னை

பெறுநர்

மாண்புமிகு திருமதி. கயல்விழி செல்வராஜ் அவர்கள்
அமைச்சர் ஆதிநலம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600009

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு,

வணக்கமும் வாழ்த்துக்களும்,

2021-22 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைகள் துவங்கிவிட்டன.

இந்நிலையில் போஸ்ட் மெட்ரிக் கல்விக் கொடை பற்றிய தமிழக அரசின் நிலைப்பாடுகள் இன்னும் தெளிவுப்படுத்தபடவில்லை. ஒன்றிய அரசு அனைத்துக் கட்டணங்களையும் வழங்கும் நிலையில், தமிழ்நாடு அரசு அ.ஆ.51 மற்றும் 52 மூலம் Post Matric Scholarship கல்விக் கொடையை 40% க்கு மேல் குறைத்து வைத்துள்ளது. அ.ஆ.51 மற்றும் 52-ஐ மறுதலிக்க தரப்பட்ட கோரிக்கைகள் இன்னும் நிறைவேறாமல் உள்ளன. வரும் சட்டமன்றக் கூட்டத்தில் இதற்கான அறிவிப்பை வெளியிட மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறோம்.

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள 2021-25 போஸ்ட் மெட்ரிக கல்விக் கொடை வழிகாட்டியில், 'Freeship Card' என்பதை ஒவ்வொரு மாணவரும் பெற வேண்டும் என்று கூறியுள்ளது. இந்த நடைமுறை மாணவர்க்குப் பெரும் தொல்லையாகவும், அலைச்சலையும், செலவையும் கொண்டு வரும். இது ஒரு தேவையற்ற நடைமுறையும் ஆகும். ஏற்கனவே 1970-80 களில் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்ட நடைமுறை தான் இது. அன்று இது 'உரிமைச்சீட்டு' (Entitlement Card) என்று அழைக்கப்பட்டது.

# Social Watch - Tamilnadu

தமிழ்நாட்டில் கல்லூரியில் சேரும் பட்டியல் இன மாணவர்கள் (PMS க்குத் தகுதி ஆவோர்). முன் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்ற அரசாணை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஒரே ஒரு அரசாணை சாதிக்கும் இடத்தில் லட்சக்கணக்கான 'Freeship Crad' வாங்கச் சொல்வது மாணவர்க்கும், பெற்றோர்க்கும் நிர்வாகத்திற்கும் கால விரயமும், பணச்செலவையும் கொண்டு வரும்.

ஆகவே தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல், நாடு முழுவதும் அந்தந்த மாநில அரசுகள் 'முன்கட்டணம்' வாங்கக் கூடாது என்ற அரசாணையை வெளியிடுவது போதுமானது என்று 2021-25 போஸ்ட் மெட்ரிக் வழிகாட்டியை மாற்ற வேண்டும்.

இந்த அரசாணை நகலை ஒவ்வொரு மாணவரும் வலைத்தளத்திலிருந்து நகல் எடுத்துக் கொள்ளலாம். மாநில அரசுகளும் ஒவ்வோராண்டும் இதை வலியுறுத்திக் கல்வி நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பலாம். செய்தி வெளியீடும் தரலாம்.

தமிழ்நாட்டில் இந்த எளிய நடைமுறையைத் தொடர்ந்து கடைபிடிக்க ஆவன செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறோம்.

வாழ்த்துடன்

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப. (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர் – பாலம், அம்பு
மின்னஞ்சல்: rcg1952@gmail.com
அலைபேசி: 94440 45215

அருட்பணி.கி.ஜான் குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம் – தமிழ்நாடு
மின்னஞ்சல்: kumar@swtn.org
அலைபேசி: 94444 69685

**1st June 2021**

**To**

Hon'ble Minister for ADTW
Fort St George,
Secretariat, Tamil Nadu - 600009

**Sub: The Suggestions and the Recommendations-PVTG Reg;**

**Dear Sir, Greetings.**

This is Fr. John Kumar, Dir-Social Watch-Tamilnadu, a civil society forum involved in policy research and budget advocacy, echoing the livelihood concerns of Women, Children, SCs and STs for more than 2-decades in Tamilnadu.

Recently we had an online webinar for PVTG groups. The Representatives articulated and came-up with the following suggestions and recommendations.

We are forwarding them for speedy implementation.

Recommendations made in the zoom meeting held on 27-5-2021 by Social Watch and PAALAM with PVTG representatives:

1. The Conservation cum Development (CCD) Plans for each of the 6 tribes need to be prepared. One organisation for each of these tribes can be provided Rs 3 lakhs each to prepare the CCD for respective tribes.

2. In the last 5 years there has been room for satisfaction that novel proposals mooted by the civic society have been accepted and schemes sanctioned.

3. However there is a deep concern in tardy implementation. Hardly 5% implementation is being achieved.The delay is attributable to entrusting works to unwilling or incompetent agencies.

4. Beneficiaries should be helped with hand holding assistance to make best uses of novel schemes.

5. Several new proposals were suggested by members. Action is requested on these proposals which will be sent in writing too.

6. Schemes have already been sent to Director via Ooty Collector in February itself under PVTG.

7. Immediate needs of Paniars centred around getting house sites and lands to cultivate.

8. The Paniar Women Society formed already needs support.

9. Housing, roads,drinking water are crying needs of Kaattu Nayakkars. The dozens of families displaced by the Government are left in the lurch.

10. The Irulars have started a society to collect and market minor Forest produces. They are into training 100 odd Tribes in making bamboo products. The Society needs assistance.

11. In Anaikatti only 180 out of 500 acres enjoyed by Irulars for decades, have been given title under 2006 Tribals Forest Rights Act.

12. Thodars have been sanctioned local buffalo dairies and fishing ponds. Execution is pending.

13. Eco centres should be taken out of Forest Dept's control and vested in Tribes independent management.

14. Cultural Tourist circuits are being talked about a long time. Has to be given a concrete shape.

15. All LAMP Societies (23) should be brought under Tribal Director as functional Registrar.

Yours sincerely,

K. John Kumar,

Director - Social Watch-TN

and

R.Christodas Gandhi IAS Rtd ,

Additional Chief Secy 9444045215

**Copy to:**

1. Ms. Anu George IAS, Sect to CM

இடம்: சென்னை,
தேதி:09.05.2021.

பெறுநர்:

மாண்புமிகு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்,
நிதி அமைச்சர்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு !

நல்ல அறிவார்ந்த சொற்றிறம் மிக்க தாங்கள் நிதி அமைச்சரானமைக்கு, எங்களது மலர்ச்சியான வாழ்த்துக்கள்.

பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் செயல்பாட்டில் உங்களோடு இணைந்து செயல்பட நாங்கள் முனைப்போடு உள்ளோம். பட்டியல் இனத் துணைத் திட்டம் ( Development Action Plan for SC - DAPSC ) பற்றியும், பழங்குடி துணைத் திட்டம் (Development Action Plan For ST) பற்றியும் தனியே தங்களுக்கு, விரிவாக எழுத உள்ளோம்.

தாங்கள் மாநிலத்தின் நிதி நிலைமையை நிமிர்த்துவது குறித்துத் தெளிவான எண்ணங்களை வெளிப்படுத்தி உள்ளீர்கள். அதற்கு எங்களது பாராட்டுக்கள்.

இந்தத் தருணத்தில் நான்கு பரிந்துரைகளை மட்டும் தங்களின் கனிவான பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1) உங்களது காலத்தில் பற்றாக்குறை பட்ஜெட் (Deficit Budget) தயாரிப்பதை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். புதிய கடன் சுமையை ஏற்றாமல் இருந்தாலே இது சாத்தியப்படும்.

2) அரசு கடன் (Government Borrowings) பெற வேண்டுமானால், சட்டமன்றத்தில் முன்னதாகவே வாதித்து, அரசு முடிவு செய்ய வேண்டும். இதுகாறும் அரசு கடன் பெறுவதை நிதிச் செயலகம் மட்டுமே அறுதியிட்டு வந்துள்ளது.

3) நிர்வாகச் செலவினத்தை ஆண்டுக்கு 5 % ஆக அடுத்த 5 ஆண்டுகள் குறைப்பது சாத்தியப் படுவதே. இதை உறுதி செய்ய வேண்டுமானால், பல அதிகாரங்களைச் செயலகத்திலிருந்து இயக்ககங்களுக்கும், இயக்ககத்திலிருந்து மாவட்ட அதிகாரிகளுக்கும் மாற்றுவது இன்றியமையாதது.

4) தங்களது கட்டுப் பாட்டிலுள்ள தலைமைச் செயலக நிதித் துறையில் இதை எளிதாகக் கொண்டு வர முடியும். தற்போது 100 ரூபாய் பெறுமானமில்லாக் கோப்புகள் எல்லாம் எல்லாத் துறைகளிலிருந்தும் நிதித் துறைக்கு, அன்றாடம் அனுப்பப் படுகின்றன. இதைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும். பட்ஜெட் BE - இல் ஒப்பளிக்கப்படும் எல்லாத் திட்டங்களுக்கும், அந்தந்த நிர்வாகத் துறையே விதிமுறைகளைக் கடைப்பிடித்து, ஒப்புதல் வழங்கலாம், அல்லது ரூ.100 கோடிக்கு மேற்பட்ட திட்டங்களுக்கு மட்டும் நிதித் துறைக்குக் கோப்புகளை அனுப்புமாறு செய்யலாம். இதை நடைமுறைப் படுத்தினால் நிதித் துறையில் 80 % கோப்புப் போக்குவரத்துகள் குறைந்து போகும். நிதித் துறை ஒவ்வொரு துறைக்குமான, மொத்த பட்ஜெட் செலவின ஆய்வுகளை மாதந்தோறும், செய்து வருவதே, போதுமான நிதித்துறை கண்காணிப்பாக இருக்கும்.

வாழ்த்துடன்.

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர்-பாலம், அம்பு – தமிழ்நாடு,
மின்னஞ்சல்:rcg1952@gmail.com
அலைபேசி: 9444045215

அருட்பணி.கி.ஜான்குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம்,
மின்னஞ்சல்: kumar@swtn.or
அலைபேசி: 9444469685

இடம்: சென்னை,
தேதி:09.05.2021.

பெறுநர்:

மாண்புமிகு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்,
நிதி அமைச்சர்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு !

நல்ல அறிவார்ந்த சொற்றிறம் மிக்க தாங்கள் நிதி அமைச்சரானமைக்கு, எங்களது மலர்ச்சியான வாழ்த்துக்கள்.

பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் செயல்பாட்டில் உங்களோடு இணைந்து செயல்பட நாங்கள் முனைப்போடு உள்ளோம். பட்டியல் இனத் துணைத் திட்டம் ( Development Action Plan for SC - DAPSC ) பற்றியும், பழங்குடி துணைத் திட்டம் (Development Action Plan For ST) பற்றியும் தனியே தங்களுக்கு, விரிவாக எழுத உள்ளோம்.

தாங்கள் மாநிலத்தின் நிதி நிலைமையை நிமிர்த்துவது குறித்துத் தெளிவான எண்ணங்களை வெளிப்படுத்தி உள்ளீர்கள். அதற்கு எங்களது பாராட்டுக்கள்.

இந்தத் தருணத்தில் நான்கு பரிந்துரைகளை மட்டும் தங்களின் கனிவான பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1) உங்களது காலத்தில் பற்றாக்குறை பட்ஜெட் (Deficit Budget) தயாரிப்பதை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். புதிய கடன் சுமையை ஏற்றாமல் இருந்தாலே இது சாத்தியப்படும்.

2) அரசு கடன் (Government Borrowings) பெற வேண்டுமானால், சட்டமன்றத்தில் முன்னதாகவே வாதித்து, அரசு முடிவு செய்ய வேண்டும். இதுகாறும் அரசு கடன் பெறுவதை நிதிச் செயலகம் மட்டுமே அறுதியிட்டு வந்துள்ளது.

3) நிர்வாகச் செலவினத்தை ஆண்டுக்கு 5 % ஆக அடுத்த 5 ஆண்டுகள் குறைப்பது சாத்தியப் படுவதே. இதை உறுதி செய்ய வேண்டுமானால், பல அதிகாரங்களைச் செயலகத்திலிருந்து இயக்ககங்களுக்கும், இயக்ககத்திலிருந்து மாவட்ட அதிகாரிகளுக்கும் மாற்றுவது இன்றியமையாதது.

4) தங்களது கட்டுப் பாட்டிலுள்ள தலைமைச் செயலக நிதித் துறையில் இதை எளிதாகக் கொண்டு வர முடியும். தற்போது 100 ரூபாய் பெறுமானமில்லாக் கோப்புகள் எல்லாம் எல்லாத் துறைகளிலிருந்தும் நிதித் துறைக்கு, அன்றாடம் அனுப்பப் படுகின்றன. இதைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும். பட்ஜெட் BE - இல் ஒப்பளிக்கப்படும் எல்லாத் திட்டங்களுக்கும், அந்தந்த நிர்வாகத் துறையே விதிமுறைகளைக் கடைப்பிடித்து, ஒப்புதல் வழங்கலாம், அல்லது ரூ.100 கோடிக்கு மேற்பட்ட திட்டங்களுக்கு மட்டும் நிதித் துறைக்குக் கோப்புகளை அனுப்புமாறு செய்யலாம். இதை நடைமுறைப் படுத்தினால் நிதித் துறையில் 80 % கோப்புப் போக்குவரத்துகள் குறைந்து போகும். நிதித் துறை ஒவ்வொரு துறைக்குமான, மொத்த பட்ஜெட் செலவின ஆய்வுகளை மாதந்தோறும், செய்து வருவதே, போதுமான நிதித்துறை கண்காணிப்பாக இருக்கும்.

வாழ்த்துடன்.

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர்-பாலம், அம்பு – தமிழ்நாடு,
மின்னஞ்சல்:rcg1952@gmail.com
அலைபேசி: 9444045215

அருட்பணி.கி.ஜான்குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம்,
மின்னஞ்சல்: kumar@swtn.or
அலைபேசி: 9444469685

தேதி : 02.06.2021

பெறுநர்:

மாண்புமிகு திரு.பழனிவேல் தியாகராஜன் அவர்கள்
அமைச்சர், நிதி மற்றும் மனிதவள மேலாண்மை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, வாழ்த்துக்கள் !

'பட்டியல் இனத்தவர் ஒதுக்கீடு' பொருண்மை ஆதி திராவிடர் நலத்துறையிடம் இருந்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைக்கு மாற்றப்பட்டு இருபது ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும் இத்துறையில் பட்டியல் இனத்தவர் தொடர்பான கட்டமைப்புகளோ, கண்காணிப்போ இதுவரை அரங்கேறவில்லை.

தங்களது காலத்தில் பட்டியல் இனத்தவர்க்காகப் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிடத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

1. பட்ஜெட் புத்தகங்களில் பணியாளர்கள் எண்ணிக்கை Number Statement என்ற அறிக்கையில் ஆண்டாண்டு வெளியிடப்படுகிறது. அதே அறிக்கையைப் பட்டியல் இன/பழங்குடியின/OBC என்ற பகுப்புகளோடு வெளியிட வேண்டுகிறோம்.

2. மைய அரசு பட்ஜெட்டின் போது ஒவ்வொரு துறையும் ஆண்டறிக்கை தரும். அதில் ஒரு அங்கமாக ஒவ்வொரு துறையும் அவரவரது துறையில் I,II,III,IV என்ற ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை பட்டியல் இனத்தவர் உள்ளனர் என்ற விவரம் வெளியிடப்படும். அதே போன்று தமிழ்நாடு பட்ஜெட்டின் போது வெளிவரும் கொள்கைக் குறிப்பு (Policy Note) நூலில் அந்தந்தத் துறைப் பணியாளர் விவரங்களும், அவருள் SC/ST/BC/OBC விவரங்களும் தர ஆவன செய்ய வேண்டுகிறோம்.

3. ஆ ஆ 65 ஆதிந 9-4-1997 இன்படி

பட்டியல் இனப் பணியாளர்களுடனும், அவரது சங்கங்களுடனும் துறை அதிகாரிகள் "பற்றாளர் கூட்டம்" நடத்துவதை இத்துறைதான் உறுதிப்படுத்த

வேண்டும். செயலகத்தில் இக்கூட்டத்தை நடத்துவதற்கு இத்துறைதான் பொறுப்பு, இதை நெகிழ்ச்சி இல்லாமல் நடத்துவதை உறுதிப்படுத்த வேண்டுகிறோம்.

4. தமிழ்நாட்டின் பதவி உயர்வில் ஒதுக்கீடு நடைபெறும் துறைகளை இத்துறை இதுவரை சரியான வழிகாட்டுதல் செய்யவில்லை. இந்த வழிகாட்டுதலை செவ்வையாகச் செய்ய ஆவன ஆற்ற வேண்டுகிறோம்.

5. பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாகப் பல ஆண்டுகளாக இத்துறை எதிர்மறை நிலைப்பாடுகளை எடுத்து வந்துள்ளதை இத்தருனத்தில் எடுத்து வைக்கத் தள்ளப்பட்டுள்ளோம். நேர்மறை ஆர்வம் இல்லாமல் இருந்து வந்துள்ளது என்றே சொல்ல வேண்டியுள்ளது. இந்த நிலைமையை மாற்ற தாங்கள் முன்னெடுப்பு செய்ய வேண்டும் என அன்போடு வேண்டிக் கொள்கிறோம்.

தங்கள் அன்புள்ள

இரா.கிருத்துதாசுகாந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர் - பாலம்,அம்பு
மின்னஞ்சல்: rcg1952@gmail.com
அலைபேசி: 9444045215

// SOCIAL WATCH - TAMILNADU

சென்னை,
05.05.2021

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்,

திரு. ………………………… அவர்களுக்கு,

சட்டமன்ற உறுப்பினர் ஆனமைக்குத் தங்களுக்குப் பாலம் மற்றும் சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டியல் இனம், பழங்குடி நலம், மகளிர் நலம், சமத்துவக் கல்வி, உள்ளாட்சிகளின் சுய உரிமை ஆகியன பற்றி எங்களது பாலம் மற்றும் சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு அமைப்புகள் சட்டமன்ற உறுப்பினர்களோடு இணைந்து செயல்பட முனைப்போடு உள்ளோம்.

நாங்கள் நடத்தும் கருத்துக் கூட்டங்களில் (ZOOM) தாங்கள் கலந்து கொண்டு தங்களது மேலான ஆலோசனைகளை வழங்க அன்போடு வேண்டுகிறோம்.

இத்துடன் எங்களது மூன்று ஆய்வு நூல்களை உங்களின் கனிவான பார்வைக்கு அனுப்பியுள்ளோம்.

பட்டியல் இனத்தவருக்கு ரூ.10 கோடியில் புதிய பத்துத் திட்டங்களை நிறைவேற்றித் தர மாண்புமிகு. முதலமைச்சரை வேண்டி உள்ளோம். அதன் நகலையும் இணைத்துள்ளோம். கூட்டணி அங்கத்தினர் என்ற உரிமையில் தாங்களும், முதலமைச்சர் அவர்களிடம் இதை முன்னெடுத்துச் செய்யவும் அன்போடு வேண்டுகிறோம்.

வாழ்த்துக்கள்.

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப. (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர் – பாலம், அம்பு
மின்னஞ்சல்: rcg1952@gmail.com
அலைபேசி: 94440 45215

அருட்பணி.கி.ஜான் குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம் – தமிழ்நாடு
மின்னஞ்சல்: kumar@swtn.org
அலைபேசி: 94444 69685



202, Chitra Avenue, Shopping Inn, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. Tamil Nadu, India.
Phone : 0091 - 44 - 2374 6044, E-mail : krisjkumar2000@gmail.com Web : www.swtn.org

## கட்சிகளின் பார்வைக்கு

வரும் 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை ஒட்டி, கட்சிகளுக்காகப் பட்டியல் இனத்தவர் வைக்கும் கோரிக்கைகள். இவற்றைத் தேர்தல் அறிக்கையில் சேர்க்கவும், தேர்தலுக்குப் பின்னர் ஆளுங் கட்சியாகவோ, எதிர்க்கட்சியாகவோ இருந்து இவற்றை நிறைவேற்றித் தரவும் வேண்டுகிறோம்.

1. **"கல்வி"** என்ற பொருண்மையை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும். இதற்காகத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்ற வேண்டும். குறைந்தது 10 மாநிலங்களின் துணையோடு மைய அரசுக்கு இந்த அழுத்தம் தரப்பட வேண்டும்.

2. துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, ரேசன்கடை ஆகியவற்றைப் பஞ்சாயத்துகள் பொறுப்பெடுத்து நடத்தும் வகையில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும்.

3. உயர்/ மேல்நிலைப் பள்ளிகளைப் பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்தவேண்டும்.

4. GSTவரி வசூல் மாநில அதிகாரிகளால் செய்யப்பட்டு, மைய அரசுக்குத் தரப்பட வேண்டும் பங்கீட்டை, மாநில அரசு பிரித்து வழங்கும் வகையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். சுவிட்சர்லாந்து நாட்டில் வரி வசூல் முறை இப்படித்தான் நடக்கிறது.

5. பள்ளர் - மறவர், பறையர் - வன்னியர், அருந்ததியர் - கவுண்டர் சமூகங்களிடையே கூடி வாழும் பண்பாட்டை வளர்ப்பதற்காக 100 இடங்களில் 50 : 50 விகிதத்தில் நூறு நூறு வீடுகளைக் கொண்ட குடியிருப்புகளை உருவாக்க வேண்டும். அடுத்தடுத்த வீடுகள் அடுத்தடுத்த சமுதாயமாக அமைய வேண்டும்.

6. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தை அதன் இப்போதைய நோக்கங்கள் சிதையாமல் நடைமுறைப்படுத்த வேண்டும். மைய அரசுப் பங்களிப்பு வந்தாலும் வராவிடிலும் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆண்டுக்கு ரூ 2,000/ கோடி.

7. தத்தமது கட்சிகளின் ஒன்றியச் செயலர்/ தலைவர், மாவட்டச் செயலர்/ தலைவர் ஆகிய பதவிகளில், அந்தந்த மாவட்டப் பட்டியல் இன விகிதத்திற்கு ஏற்பப் பட்டியல் இனத்தவர்க்கு வாய்ப்புகள் அளிக்க வேண்டும்.

8. ஒரு கோடி ரூபாய் தொழில்/வணிக முதலீட்டில் 1000 பட்டியல் இனத்தவருக்கு ஆண்டாண்டு கடன் வசதி அளிக்கும் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும். வங்கிகள் பயனாளிகளை முடிவுசெய்யும். பயனாளிகள் தேர்வை அரசு முடிவு செய்யலாகாது.

அந்தந்த வங்கிகளே அவரவரது நடைமுறைப்படி கடன் ஒப்புதல் வழங்கும். கடன் தொகையில் 30% த்தை அரசு நேரடியாக வங்கிகளுக்குத் திட்டம் செயல்படுத்தப்பட, செயல்படுத்தப்பட மூன்று தவணைகளில் விடுவிக்கலாம். ஆண்டுக்கு ரூ 300/- கோடி.

9. பட்டியல் இனத்திற்கான வரையறை அவர்கள் **"சாதியை ஏற்காத இனங்கள்" (Class of people who have not accepted caste)** என்பதாக திருத்தப் படவேண்டும். **Scheduled Caste** என்ற பெயரும் **'Equitable Class' (சமன்பாட்டு வகுப்பு)** என்று மாற்றப்படவேண்டும். இதற்கான தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் இயற்றி மைய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

10. பட்டியல் இனத்தவர்க்கு உள் ஒதுக்கீடு வழங்க மாநில அரசுகளுக்கு உரிமை உண்டு. தமிழ்நாட்டுப் பட்டியல் மக்கள் தொகையில் **95%** பறையர், பள்ளர், அருந்ததியர் ஆகிய மூன்று பேரினங்கள் மட்டுமே வருகின்றன. ஆகவே இம்மூன்று இனத்தொகுப்புகளுக்கும் அவரவரது மக்கள் தொகைக்கு ஏற்ப மொத்தப் பங்கீட்டைப் பிரித்து வழங்கலாம். 76 பட்டியல் இனத்தவரில் மீந்துள்ள இனத்தவரை ஒரு தொகுப்பாக்கி மொத்தம் நான்கு கூறுகளாகப் பிரித்து வழங்கலாம்.

11. பட்டியல் இனப் பங்கீடு 2011 மக்கள் கணக்கெடுப்பின்படி **20.1%** ஆக உயர்த்தப்பட வேண்டும்.

12. பழங்குடித் துறையில் உள்ள பணியிடங்கள் பழங்குடிகளுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டும். தவிர வனக்காப்பாளர், வனவர், வனச்சரகர் வரை அனைத்து வனத்துறைப் பதவிகளும் பழங்குடியினர்க்கே வழங்கப்பட வேண்டும். அல்லது 50% பழங்குடியினர்க்கும் மீதி 50% சுழற்சி முறையிலும் வழங்கப்பட வேண்டும்.

13. பழங்குடித் துறை இயக்குநர் பதவியில் இனி IFS அதிகாரிகளை அமர்த்தக் கூடாது. பழங்குடித்துறைப் பணிகளைத் தனி அலகாக்கி இயக்குநர் பதவி, TRC இயக்குநர் பதவி ஆகியவற்றில் பழங்குடியினரையே அமர்த்த வேண்டும்.

14. மாற்றுத் திறனாளிகள் துறையில் மாற்றுத் திறனாளிகளையே இயக்குநர், அரசுச்செயலர் பதவிகளில் அமர்த்த வேண்டும்

15. பட்டியல் இனத்தவர் நடத்தும் எந்த வகையான கல்வி நிறுவனமாக இருந்தாலும் (துவக்கப்பள்ளி முதல் தொழிற் கல்வி நிறுவனங்கள் வரை) அந்நிறுவனங்களுக்கு அரசு உதவிபெறும் நிறுவனங்களுக்கு வழங்குவது போன்று நிதி உதவி வழங்க வேண்டும். சுயநிதி நிறுவனங்களாக நடத்துவோர்க்கு 50% நிதி உதவி வழங்கலாம். அவர்களது மாணவர் சேர்க்கையில் 30% எந்தக் கட்டணமும் இன்றி மாணவர்கள் சேர்க்கப்படலாம்.

16. பஞ்சாயத்துகளில் உள்ள துப்புறவுப் பணியாளர்களுக்கு மாதம் ரூ.20,000/- ஊதியம் வழங்க வேண்டும். 13,000 பஞ்சாயத்து x 4 பணியாளர் x ரூ 20,000 x 12 மாதம் = ரூ.1248 கோடி.

17. ஆதிதிராவிடர் நலத்துறை என்ற பெயரை சமன்துறை (Equitable Department) என்று மாற்றம் செய்ய வேண்டும்.

1. பொறி மு.ஊர்காவலன்,ME. (Rtd),S.E, PWD.தலைவர் தேவேந்திரர் சமூக பாதுகாப்பு கூட்டமைப்பு. விருதுநகர்.
2. வை.முருகன் தேவதாஸ், பொதுச் செயலாளர், தியாகி இமானுவேல் பேரவை, தென்காசி.
3. மணிவண்ணன், மாநில துணைத்தலைவர், பகுஜன் சமாஜ் கட்சி.
4. Dr,ராம்நாத், திருநெல்வேலி.
5. மா.பரதன், மனித உரிமை களம், திருநெல்வேலி. மா. பரதன் 9443117665
6. ஆ.ரமேஷ் பாபு, வழக்குரைஞர், திருநெல்வேலி.
7. முருகன், திருநெல்வேலி.
8. ராஜீ. சிவகங்கை.
9. ராமர், தூத்துக்குடி.
10. வள்ளிநாயகம், சென்னை.
11. இளஞ்செழியன், வழக்குரைஞர், தலைவர் உலகத் தமிழ்க்கழகம்.
12. சுப்புக்காளை, அம்மாபட்டி பள்ளர் தேவேந்திரர் உறவின் முறை, சிவகாசி.
13. ரமேஷ்,SM,(Rtd) அலகாபாத் வங்கி, மதுரை.
14. நவநீத சிவகுமார், தலைவர், CAI, கோயம்புத்தூர்.
15. ராஜா, தலைவர், கோயம்புத்தூர் பள்ளர் கல்வி பொருளாதார முன்னேற்ற இயக்கம்.
16. மனோகரன்,ராஜபாளையம்.
17. சந்திரமோகன், ஈரோடு பள்ளர் பேரவை.
18. சுரேஷ்குமார், தலைவர், சவுண்டப்பூர் ஊராட்சி, ஈரோடு.
19. சித்தீஸ்வரன், திருப்பூர்.
20. நடேசன், நாமக்கல் பள்ளர் இயக்கம்.
21. ராமர், அலகாபாத் வங்கி, (ஓய்வு).
22. அய்யனார், தேனி.
23. முனிவாசகம், IRS (R)
24. சங்கர்ராஜ்,அபுதாபி.
25. இரா.கிருத்துதாசு காந்தி,IAS (ஓய்வு) 18/11/2020 9444045215
26. ஜெ. சுசில் ராஜசேகர் வழக்கறிஞர் 9444723479

18/12/20

தேதி : 11.05.2021

விடுநர்

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),

முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,

நிறுவனர்-பாலம், அம்பு

சென்னை

பெறுநர்

திரு இறையன்பு இஆப அவர்கள்,
தலைமைச் செயலர்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600009

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய இறையன்பு அவர்களுக்கு,

தாங்கள் தலைமைச் செயலராகப் பணி ஏற்றுள்ளமைக்கு மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

2000 இலிருந்து 20 ஆண்டுகளில் எட்டு பிராமணர்கள் தலைமைச் செயலராக இருந்துள்ள ஒரு போக்கு உங்களால் தோற்றுப் போனது பெருத்த மகிழ்ச்சி.

திரு திரவியத்திற்குப் பிறகு தமிழாய்ந்த ஒருவர் தலைமைச் செயலராய் வந்திருப்பது இன்னொரு சிறப்பு.

உங்களது காலத்தில் பட்டியல் இனத்துறை ஏற்றத்துடனும் சுயத்துடனும் செயல்பட ஆவன செய்ய வேண்டுகிறோம். இது பற்றி தனியே தங்களுக்கு எழுதுகிறோம்.

வாழ்த்துடன்

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,

தொலைபேசி: 9444045215
மின்னஞ்சல்: rcg1952@gmail.com

தேதி : 11.05.2021

விடுநர்

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),

முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,

நிறுவனர்-பாலம், அம்பு

சென்னை

பெறுநர்

திரு இறையன்பு இஆப அவர்கள்,

தலைமைச் செயலர்,

புனித ஜார்ஜ் கோட்டை,

சென்னை 600009.

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய இறையன்பு அவர்களுக்கு,

வாழ்த்துக்கள்!

தங்களின் தலைமைச் செயலர் கால கட்டத்தில் பட்டியல் இனத்துறையைச் செயல்படும் துறையாக இயக்கத் தங்களை வேண்டிக் கொள்கிறோம்.

கடந்த இருபது ஆண்டு காலத்தில்;

1. பட்டியல் இனத் துறையில் புதுத் திட்டங்களே உருவாக்கப் படவில்லை.

2. ரூ 15000 கோடியாக உயர்த்தப்பட்டுள்ள பட்டியல் இனத் துணைத் திட்டத்தை வடிவமைப்பதில், பட்டியல் இனத் துறை அமைச்சருக்கும், செயலருக்கும்

சுதந்திரம் அளிக்கப் படவில்லை; அவர்களும் சுய சிந்தனையுடன் செயல் படவில்லை.

3. புதிய திட்டங்கள் ஏதும் கொண்டு வரப்படவில்லை என்பதோடு, நில எடுப்பு, வீட்டு மனை வழங்குதல், சமத்துவபுரம், 10-12 வகுப்புத் தலை மாணாக்கர்க்குப் பரிசு போன்ற பல நல்ல திட்டங்கள் கைவிடப் பட்டன. ஆதிநலப்பள்ளிகளில் மாணவச் சேர்க்கை 60% சரிந்துள்ளது.

4. Post matric கல்விக் கொடைக்கு, திரு சண்முகம் நிதிச் செயலராகவும், தலைமைச் செயலராகவும் இருந்த 2011 ம் ஆண்டிலிருந்து, அந்தந்த ஆண்டிற்கான budget estimate தொகை அந்தந்த ஆண்டு budget ல் வழங்கப் படவேயில்லை.

5. திரு சண்முகம் பணியில் இருந்த வரையில் post matric கல்விக் கொடை வழங்கப் படுவதைத் தடுத்து வந்தார் (அஆ 51-52). இந்தச் சண்முகத் தடை இன்னும் நீடிக்கிரது.

இன்னும் சில உள. இவ்வளவில் உங்கள் நாட்டத்தை ஈர்க்க விழைகிறோம். பட்டியல்இனத்துறை இன்னும் பரிமளிக்கத் தங்களது பங்களிப்பை வேண்டுகிறோம்.

வாழ்த்துடன்

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர்-பாலம், அம்பு,சென்னை
தொலைபேசி: 9444045215
மின்னஞ்சல்: rcg1952@gmail.com

Letter 1: Date: 1-6-2021

From

Dr. R. Christodas Gandhi IAS (Rtd)
Rtd Additional Chief Secretary
G1802 TAISHA,Virugambakkam
Chennai - 600 098
Ph.No: 9444045215

To

Thiru. Manivaasan IAS
Principal Secretary Adi Dravidar and Tribal Welfare
Fort St George
Chennai.

Dear Thiru. Manivaasan,

Vanakkam!

Congratulations for assuming a very key portfolio as Secretary to Adi Dravidar and Tribal Welfare Department.

We wish that you make this Department a functional one during your tenure. Please see our letter to Chief Secretary and Honorable Minister, Adi Dravidar and Tribal Welfare Department where we have pointed out that for over 20 years no new schemes have been introduced by this Department.

We expect you to vitalise the following functioning in ADTW Department.

1. Development Action Plan for SC and STs (DAPSC and DAPST - the then SCSP and TSP)
The most encouraging signs in the development of this concept are the structural changes that were brought in and the total budgettary allocation made in the last decade

which makes up to the reqired proportion. The total amount stands around Rs.14,000/- crore as on date.

However, the most disappointing facets are:

a. Ineffective role played by the ADTW Department by failing to exercise its powers and functions mandated as the nodal authority, see GO. Issued in 2005.

b. No new schemes introduced at all.

c. Barring the schemes in ADTW Department all the other schemes of other Departments are only general schemes. Moreover near 70% of these schemes are GOI schemes only (See analysis by Social Watch TN).

d. No civil society consultations are ever held nor any evaluation or social audit of these schemes undertaken.

We hope in your tenure you put in place the structural functioning in a vibrant way. A few suggestions are:

a. Since the work burden on community certificate verification has been reduced to a great extent, the three Additional Secretary posts secured for this work can be utilized for having quarterly discussions with other Departments along with civil society representatives. These meetings should review expenditure progress of DAPSC/DAPST schemes as well as evaluate the efficacy of these schemes.

b. Secretary ADTW should exercise his individuality in finalizing the inclusion of schemes.

c. Put up in the portals annual list of schemes with account details of previous years.

d. Secretary ADTW should ensure that not more than 50% of schemes are indivisible schemes. At least 10% of each Departments annual allocation should be on account of new schemes.

e. Constitute an expert committee with civil society representives to devise positive schemes for SC/STs.

Best wishes. ( More to come)

Yours,

R.Christodas Gandhi IAS Rtd
+91 94440 45215
Email: rcg1952@gmail.com

**1st June 2021**

**To**

Thiru. Manivaasan IAS.
Secretary ADTW
Fort St George,
Secretariat, Tamil Nadu - 600009

**Sub: The Suggestions and the Recommendations-PVTG Reg;**

**Dear Sir, Greetings.**

This is Fr. John Kumar, Dir-Social Watch-Tamilnadu, a civil society forum involved in policy research and budget advocacy, echoing the livelihood concerns of Women, Children, SCs and STs for more than 2-decades in Tamilnadu.

Recently we had an online webinar for PVTG groups. The Representatives articulated and came-up with the following suggestions and recommendations.

We are forwarding them for speedy implementation.

Recommendations made in the zoom meeting held on 27-5-2021 by Social Watch and PAALAM with PVTG representatives:

1.The Conservation cum Development (CCD) Plans for each of the 6 tribes need to be prepared. One organisation for each of these tribes can be provided Rs 3 lakhs each to prepare the CCD for respective tribes.

2.In the last 5 years there has been room for satisfaction that novel proposals mooted by the civic society have been accepted and schemes sanctioned.

3. However there is a deep concern in tardy implementation. Hardly 5% implementation is being achieved.The delay is attributable to entrusting works to unwilling or incompetent agencies.

4. Beneficiaries should be helped with hand holding assistance to make best uses of novel schemes.

5.Several new proposals were suggested by members. Action is requested on these proposals which will be sent in writing too.

6.Schemes have already been sent to Director via Ooty Collector in February itself under PVTG.

7. Immediate needs of Paniars centred around getting house sites and lands to cultivate.

8. The Paniar Women Society formed already needs support.

9.Housing, roads,drinking water are crying needs of Kaattu Nayakkars. The dozens of families displaced by the Government are left in the lurch.

10.The Irulars have started a society to collect and market minor Forest produces. They are into training 100 odd Tribes in making bamboo products. The Society needs assistance.

11. In Anaikatti only 180 out of 500 acres enjoyed by Irulars for decades, have been given title under 2006 Tribals Forest Rights Act.

12. Thodars have been sanctioned local buffalo dairies and fishing ponds. Execution is pending.

13.Eco centres should be taken out of Forest Dept's control and vested in Tribes independent management.

14.Cultural Tourist circuits are being talked about a long time. Has to be given a concrete shape.

15.All LAMP Societies (23) should be brought under Tribal Director as functional Registrar.

Yours sincerely,

K. John Kumar,
Director - Social Watch-TN

and

R.Christodas Gandhi IAS Rtd ,
Additional Chief Secy 9444045215

**Copy to:**

1. Hon'ble Minister for ADTW, Secretariat
2. Ms. Anu George IAS, Sect to CM

Date : 2.06.2021

**From**

Dr. R. Christodas Gandhi IAS (Rtd)
Rtd Additional Chief Secretary
G1802 TAISHA,Virugambakkam
Chennai - 600 098
Ph.No: 9444045215

**To**

Thiru. Manivaasan IAS
Principal Secretary Adi Dravidar and Tribal Welfare
Fort St George
Chennai.

Dear Thiru. Manivaasan,

Ref: Our letter dated 1-6-2021

Vanakkam.

In continuation of our earlier letter we are sending our prayer to you in this letter II.

One of the most beneficial schemes is the Post Matric Sholarship which is a livewire for SC/STs' growth. However, in the last 8 years PMS implementation has seen ups and downs in TN.

Please ensure the following at least in your tenure.

1. Repeal GO51 and 52 ADTW. Several pleadings have been made in the last 3 years.

2. Evolve a time-table for PMS implementation. Our pleadings since 2012 have not been heeded in this regards.

3. Provide the current years' requirement in the current year budget estimate. There has been a major default in this regard since 2012. All our pleadings went unheeded.

4. Please release book grants (denied since 2003).

5. Raise the rate of scholarships for Arts and Science courses.

6. Constitute a monitoring committee with stake holders participation.

7. Publish in the portals PMS details.

8. Evolve steps to increase GER every year as per recent GOI PMS guidelines which ties PMS to GER (Gross Enrolment Ratio).

Best wishes. ( More to come)

Yours sincerely,

R.Christodas Gandhi IAS Rtd
Ph.No: +91 94440 45215
Email : rcg1952@gmail.com

Date : 03.06.2021

From

Dr. R. Christodas Gandhi IAS (Rtd)
Rtd Additional Chief Secretary
G1802 TAISHA,Virugambakkam
Chennai - 600 098
Ph.No: 9444045215

To

Thiru. Manivaasan IAS
Principal Secretary Adi Dravidar and Tribal Welfare
Fort St George
Chennai.

Dear Thiru. Manivaasan,

Ref: Our letter dated 1.6.2021 and 2.6.2021

Vanakkam.

This is third in the series of our requests addressed to you regarding rejuvenating ADTW department.

With great trust in the department's ability and its sincere application of mind, the Secretary ADTW was made the State Nodal Officer under 1989 PA Act in 1996-97 when the rules were drawn. The Nodal Authority is vested with great authority and onerous responsibilities.

a. The State Nodal Officer has overall supervising power.
b. He / She writes up the Assessment Report of Police Chief heading the wing.
c. He / She has to convene the State Vigilance Committee (விழிகண்) as well as monitor the meetings to be held by all Collectors.

Under the Act several Special Courts have been constituted and every Public Prosecutor to be appointed for each District is to be a member of SC/ST community.

However, the role played by your predecessors is pretty dismal so as to say. We hope you strike a different chord.

Please ensure the following:

1. The State Vigilance Committee headed by the Chief Minister is immediately constituted and convened twice in a year statutorily.

2. Review at your level with the Police SJ (Social Justice) Wing and the Director Prosecution every second month and post the minutes in the portal.

3. Ensure that the District Vigilance Committees allow the non-official representatives to speak out their view points.

4. Ensure that the District Vigilance Committees (விழிகண்) do not allow 'Mistake of Facts' as a matter of routine.

5. Please do a monthly review of counter cases registered by the Police whenever an FIR is filed under 1989 PA Act. This practice is becoming nefarious and needs to be stopped.

6. The Director can be made to closely monitor the payment of compensations to be made.

7. A two day training program is conducted as many times as possible in a year for District Collectors, SPs, District Public Prosecutors and non-official Vigilance Committee members.

Best Wishes.

Yours sincerely,

R.Christodas Gandhi IAS Rtd
Ph. No: +91 94440 45215
Email : rcg1952@gmail.com

Date : 04.06.2021

From

Dr. R. Christodas Gandhi IAS (Rtd)

Rtd Additional Chief Secretary

G1802 TAISHA,Virugambakkam

Chennai - 600 098

Ph.No: 9444045215

To

Thiru. Manivaasan IAS

Principal Secretary Adi Dravidar and Tribal Welfare
Fort St George

Chennai.

Dear Thiru. Manivaasan,

Ref: Our letter dated 1,2,3 - June 2021

In the fourth of this series of representations made to you, we would like your indulgence to give a new avatar to THADCO.

Please initiate actions in the following directions:

1. As GOI has stopped SCA since this year, system of financing THADCO need to be devised anew. SCA funds used to go to THADCO earlier.

2. The State Government can release annually Rs.200 Cr to THADCO for scheme disbursements.

3. Since SCA pattern ceases there is no need to confine THADCO to only beneficiaries below an income level. Schemes should be designed for all income groups with

proportion of funds determined. Not more than 30% of total funds need to be set apart for below poverty line beneficiaries.

4. THADCO should and can be made self-supporting by taking up housing and housing-plot development schemes by itself, like how Police Housing Corporation does.

5. THADCO should perform with its own functionaries and not linked to District Collectors anymore- like how TICC functions.

6. Drastic changes need to be introduced in the selection process to lessen sheer paper work in selecting beneficiaries. For bank-tied loan schemes no need for THADCO to enlist beneficiaries before ascertaining Banks' approval. That is why THADCO creates a huge applicant base more than fund availability. This leads to broad complaints. Instead applications can be received from Banks or individuals who can obtain consent letters from Banks. Those applications can be vetted by THADCO for confirming community status and income criteria laid if any. This process will eliminate 80% of infructuous paper work in District Managers office.

( More to come)

Best Wishes,

Yours sincerely,

R. Christodas Gandhi IAS Rtd
Ph. No: +91 94440 45215
Email : rcg1952@gmail.com

Date : 05.06.2021

From

Dr. R. Christodas Gandhi IAS (Rtd)

Rtd Additional Chief Secretary

G1802 TAISHA,Virugambakkam

Chennai - 600 098

Ph.No: 9444045215

To

Thiru. Manivaasan IAS

Principal Secretary Adi Dravidar and Tribal Welfare

Fort St George

Chennai.

Dear Thiru. Manivaasan,

Ref: Our letters dt 1,2,3,4- June 2021

The fifth representation of this series makes an appeal for reintroduction of certain good schemes which government dropped in the last decade.

1. Foremost amongst them is the schemes for buying lands for house sites. Prior to 2000 nearly 2000-3000 house sites in newly acquired land used to be given freely to SCs (not regularisation of existing occupation) every year. We have already represented for resuming this scheme in the Samthuvapuram pattern.

2. Awarding SC achievers in 10th and 12th standard has been given up since 2012. This was done by the School Department, which decided to stop awarding achievers , since schools started manipulating for brand images. The purpose of award for SCs is to provide an impetus to the community's children to educating themselves and not for rewarding merit of individuals. Therefore, the scheme should be revived. This should also

be extended to SC students who get university medals with a reward of Rs. One lakh for gold medal.

3. In the late 1990s a new scheme was introduced providing funds to every Collector to release grants to SCs for starting small business ventures. It was about Rs.50,000/- per beneficiary. This has been disbanded. This can now be revived in a new format. Graduates, Post-Graduates and Professional degree holders without permanent job three years after graduation, can be given Rs.5 lakhs as full grant or as margin money for a loan to start minor businesses or vendor-ships.

(More to come)

Best Wishes.

Yours sincerely,

R.Christodas Gandhi IAS Rtd
Ph. No: +91 94440 45215
Email : rcg1952@gmail.com

**Representations made to Thiru. Otem Dai , Additional Chief Secretary, ADTW, on 07.01.2021.**

**1) Post Matric Scholarship:**

a) Since GOI has announced 60% contribution all Self-financing courses to be reimbursed in full. BE Rs. 85,000/. MBBS Rs. 10 lakhs.

b) Revise scales of PMS for Arts & Science Courses.

c) Release Book Grants.

d) Issue calendar of activities

**2) Overseas Scholarships**

a) Please put on portal the guidelines of

1) State Overseas Scholarships
2) GOI Schemes
3) Thadco Scholarship

b) Increase the number of State Overseas Scholarship to 100 p.a as in the case of neighboring States.

**3) Phd Scholarship**

Since 2012 only Rs.50000/ p.a is being released. This should be upgraded to the level of JRF or Rajiv Gandhi Scholarship. Annual ceiling can be fixed at 1000 scholars (new).

**4) Rejuvenating ADTW HS Schools.**

a) Select 20 HS schools for modernization.

b) All these schools can be brought under central board converted to English medium schools. Non SC students can be levied fees. (60SC: 40 Non –SCs)

**5) Copy of representation made to political parties submitted for scrutinizing**

And suitable action can be provided an honorarium of Rs.10000/ per each of these villages. This can be provided for 5 years. They should be vested with the task of government.

a) Ensuring no drop –outs from schooling at any stage. This should be done for SCs as well as Non-SCs.

b) Undertaking evening study classes for all.

C) Undertaking special coaching to students appearing for $10^{th}$ & $12^{th}$ examinations.

d) Ensuring college admission for all SCs clearing $12^{th}$.

e) Disseminating PMS and other scholarship details for SCs & OBCs

f) Disseminating entrepreneurial scheme details.

**6. Library Orders.**

ADTW department provides grants for publication of 11 books authored by SC/STs every year.

a) The grant which was fixed at Rs. 40,000/. Since 2012 may kindly be revised to Rs.1,00,000/. ( Total Rs. 11 lakhs p.a.)

b) The Director of Library may be directed to place orders for these books automatically.

**7) Schemes for atrocity prone villages.**

a) The list should be put on the portal of Secretary ADTW, Director. ADW and the Social Justice wing of the Police.

b) Two SC Youth ( male+ female) who have done graduation.

c) All these schools can be brought under a separate society with district revenue authorities having no control.

d) Ensuring no drop –outs from schooling at any stage. This should be done for SCs as well as Non-SCs b) Undertake evening study classes for all.

e) Undertaking special coaching to students appearing for 10th & 12th examinations.

f) Ensuring college admission for all SCs clearing 12th.

g) Disseminating PMS and other scholarship details for SCs &OBCs

h) Disseminating entrepreneurial scheme details.

# Social Watch - Tamilnadu

தேதி : 09.06.2021

பெறுநா்

திருமதி. மைதிலி இராசேந்திரன் IAS,
செயலா், மனிதவள மேலாண்மைத் துறை
தலைமைச் செயலகம், கோட்டை, சென்னை

அன்புகெழுமிய திருமதி. மைதிலி இராசேந்திரன் அவா்களுக்கு,

தாங்கள் இத்துறைக்குச் செயலா் பணி பெற்றுள்ளமைக்குப் பாராட்டுகள். யாமறிந்த வகையில் திரு.பாஸ்கரதாசுக்குப் பிறகு 20 ஆண்டுகள் கழித்து இத்துறைக்குப் பட்டியல் இனத் தலைமை வாய்த்துள்ளது.

பட்டியல் இனத்தவா்க்கு உயிரோட்டமான பங்கீட்டு விதிகளைக் கையாளுவதில் முக்கிய பங்கு வகிப்பது "பணியாளா் நிா்வாகச் சீா்திருத்தம்" என்று இதுவரை அழைக்கப்பட்டு வந்த இத்துறைதான் வருத்தம் என்னவெனில், இத்துறை பெரும்பான்மையும் பட்டியல் இன பங்கீட்டு விதிகள் (Reservation rules) சீராக செயல்படுத்தப்பட சாதகமான எடுகோள்களை எடுத்ததில்லை. அலுவலக ஆணைகளையும் வெளியிடவில்லை. ஆய்வுக் கூட்டங்களையும் நடத்தவில்லை.

தங்களது பணிக்காலத்தில் கீழ்வரும் செயல்பாடுகளை நிறைவேற்றித்தர அன்போடு வேண்டுகிறோம்.

1. தலைமைச் செயலகப் பட்டியலினப் பணிச் சங்கத்துடன் காலாண்டுக்கு ஒருமுறை தங்கள் அளவில் கூட்டத்தை நடத்துதல். (அ.ஆ.65 ஆதி நலத்துறை)
2. தலைமைச் செயலகப் பணியாளா் பட்டியலை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடுதல் - சட்டத்துறை, சட்டமன்றத் துறை உட்பட.
3. பட்ஜெட்டில் வைக்கப்படும் எண் அறிக்கையில் (Number Statement) பட்டியல் இனத்தவா் பற்றிய புள்ளி விவரங்களைச் சோ்க்க இத்துறை தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. 2006 – 2011 இடைப்பட்ட காலத்தில் ஆதிந அமைச்சா் தலைமையில் நடைபெற்ற பின்னடைவைக் கணிக்கும் குழுவில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களைத் துறைவாரியாக வெளியிட வேண்டும்.
5. பட்டியல் இன பின்னடைவுப் பணியிடங்களை துறை வாரியாகக் கணித்துத் துறை வலைதளத்தில் வெளியிடுதல்.
6. ஆண்டாண்டு பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்கான முன்னெடுப்புகளை எடுத்துத் தொடா் கண்காணிப்பு செய்தல்.
7. பதவி உயா்வில் பங்கீடு (Reservation) நடைமுறைப்படுத்தப் படுவதைக் கண்காணிப்பு செய்தல்.
8. பங்கீடு விதிகளைப் பற்றியும், பற்றாளா் கூட்டங்களை நடத்துவது பற்றியுமான அரசாணைத் தொகுப்புகளைப் பனுவலாக வெளியிடுதல்.

வாழ்த்துடன்

| | |
|---|---|
| இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப. (ஓய்வு), | அருட்பணி.கி.ஜான் குமாா், |
| முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளா், | இயக்குநா், |
| நிறுவனா் – பாலம், அம்பு | சமூகக் கண்காணிப்பகம் – தமிழ்நாடு |
| மின்னஞ்சல்: rcg1952@gmail.com | மின்னஞ்சல்: kumar@swtn.org |
| அலைபேசி: 94440 45215 | அலைபேசி: 94444 69685 |

Social Watch - Tamilnadu

தேதி : 09.06.2021

பெறுநர்

திரு.சமயமூர்த்தி IAS,
முதன்மைச் செயலாளர்
வேளாண்மை துறை

அன்புகெழுமிய திரு. சமயமூர்த்தி அவர்களுக்கு,

வணக்கமும் வாழ்த்துக்களும்.

தங்களது செயலர் பணிக் காலத்தில் பட்டியல் இனத்தவர்க்கான திட்டங்கள் பாங்குற அமைய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கிறோம்.

DAPSC ரூ.826.20 கோடி + DAPST, ரூ.41.13 என மொத்தம் ரூ.867.33 கோடி பட்டியல் இனத்தவர் திட்டங்களுக்காக 2021 பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சற்றொப்ப 80% நிதி ஒன்றிய அரசுத் திட்டங்களுக்காக மடைமாற்றம் செய்யப் படுகிறது. ஒன்றிய அரசுத் திட்டங்களே மேலோங்கி இருக்க வேண்டும் என்ற தொனி ஒலிக்கிறது. பட்டியல் இனத்தவர்க்கென்று தனியே வடிக்கப்பட்ட திட்டங்களும் இதில் இல்லை. மொத்தமுள்ள 92 (53+39) திட்டங்களில் ஓரிரண்டு தவிர பிற யாவும் பொதுத் திட்டங்களே.

இது ஒருபுறம் இருக்க இந்தப் பொதுத் திட்டங்களையாவது பட்டியல் இனத்தவர்க்குக் (SC) கொண்டு சேர்க்கும் ஒரு வழிமுறையையாவது வகுக்கலாம். இதற்கு ஒவ்வொரு மாவட்டங்களிலும் 100 ஏக்கருக்கு மேல் ஒரே தொகுப்பாகப் பட்டியல் இனத்தவர்க்குச் சொந்தமாக நிலமுள்ள தொடிப்புழுதிகளைத் (தொட்டு இருக்கும் பகுதி – Cluster) வேளாண் துறை மூலமாகக் கணக்கெடுப்பு செய்ய வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் இத்தகைய தொடிப்புழுதி இருக்கின்றன. (எ.கா. நெல்லை மானூர், தூத்துக்குடி ஒட்டப்பிடாரம், தென்காசி - இராசபாளையம் பகுதிகள், திருச்சி – துறையூர் பகுதிகள், திருச்சி – குளித்தலை பகுதிகள், ஈரோடு சவுண்டபூர், நாமக்கல் தூசூர், காட்டுமன்னார்குடி, காஞ்சிபுரம் வாலாஜா இன்னபிற) அதே போன்று 50 – 100 ஏக்கர் விரிவுள்ள தொடிப்புழுதிகளையும் கணக்கெடுப்பு செய்து மாவட்டவாரியானத் தொகுப்பை வெளியிடவும் வேண்டும். இக்கணக்கெடுப்பிற்கு ஆகும் செலவை DAPSC யிலிருந்தே ஒதுக்கிக் கொள்ளலாம்.

DAPSC திட்டங்களை இந்த இடங்களில் நடைமுறைப்படுத்துவது எளிது மட்டுமல்ல, தணிக்கை இடுவதும் எளிதாகும். திட்ட விவரங்களும் பட்டியல் இனத்தவர்க்கு நேரடியாகவும், கூர்மையாகவும் போய்ச்சேரும்.

ஆறு மாதங்களுக்குள் இக்கணக்கெடுப்பை முடிக்கும் வகையில் செயல்படுத்தித் தர அன்போடு வேண்டுகிறோம்.

இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப. (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர் – பாலம், அம்பு
மின்னஞ்சல்: rcg1952@gmail.com
அலைபேசி: 94440 45215

அருட்பணி.கி.ஜான் குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம் – தமிழ்நாடு
மின்னஞ்சல்: kumar@swtn.org
அலைபேசி: 94444 69685

202, Chitra Avenue Shopping Inn, 9, Choolaimedu High Road, Chennai – 600 094. Tamilnadu, India.
Phone : 0091-44-2374 6044, E-mail: kumar@swtn.org, Web: www.swtn.org

# SOCIAL WATCH - TAMILNADU

Date: 25-6-2021

To

Thiru. Kirlosh Kumar IAS
Principal Secretary, Labour
Fort St George
Chennai.

Dear Thiru. Kirlosh Kumar,

Thanks for your precious time.

We are submitting a copy of "Analysis of SCSP/TSP 2020-21 TN" for your keen perusal Comments on Labour Department are at page 13-14,48,54-55, 67- 68.

We request you to evolve a new scheme for SCs and STs this year. Around Rs.74 Cr for SCSP (DAPSY) and Rs.4 Cr for TSP (DAPST) have been allocated for multiple schemes.

Instead two focused and new scheme can be introduced.

**Recommendation I:**

100 sons/daughters of SC Labourers and 20 of ST Labourers (irrespective of income ceiling) can be provided Rs.5 lakhs annually each for pursuing Phd in any discipline in india. This will be on par with JRF.

**COST**

| | | |
|---|---|---|
| **DAPSC** | | **Rs/Cr** |
| Per year 100 x Rs. 5 lakh | = | 5 |
| For three years | = | 15 |
| DAPST | | |
| Per year 20 x Rs. 5 lakh | = | 1 |
| **For 3 years** | = | 3 |

202, Chitra Avenue, Shopping Inn, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. Tamil Nadu, India.
Phone : 0091 - 44 - 2374 6044, E-mail : krisjkumar2000@gmail.com Web : www.swtn.org

**Recommendation II:**

100 SC labourers and 20 ST labourers can be provided interest free housing loan of Rs. 30 lakhs each every year. It can be a 20 year loan. Of this Rs.2.5 lakhs can be provided as subsidy. The employer can be made to come forward with an equal contribution against subsidy.

Cost:

1. Loan (interest free) 20 x Rs.30 lakhs = Rs. 36 Cr.p.a (DAPSC Rs. 30 Cr+ DAPST Rs. 6 Cr)
2. Subsidy Rs.2,50,000 x 120 = Rs. 3 Cr (DAPSC = Rs. 2.5 Cr + DAPST Rs. 0.5 Cr).

With best wishes

Dr. R.Christodas Gandhi, IAS (Rtd)
President, PAALAM
Email: rcg1952@gmail.com
Mobile : 9444045215

Fr.K.John Kumar
Director,Social Watch – TN
Email: kumar@swtn.org
Mobile : 9444469685

# SOCIAL WATCH - TAMILNADU

Date : 25.06.2021

Respected Thiru/Tmt ..................

Vanakkam.

Congratulations for your assumption of charge as Secretary of

..................................................... Department.

We are happy to notice that nearly 40-50% of Secretary posts remain with SC-STs and you are one illustrious officer amongst them.

Social Watch-TN and PAALAM are happy to volunteer ourselves in travelling with you in the cause of SCSTs. We hope that during your tenure positive new schemes will be designed in your Department under DAPSC and DAPST (SCSP and TSP).

We are sending herewith the analysis done by us on DAPSC and DAPST of TN as well as GOI for your closer scrutiny.

We will always be available for consultations Sir/ Madam.

With best wishes

Dr. R.Christodas Gandhi, IAS (Rtd)
President, PAALAM
Email: rcg1952@gmail.com
Mobile : 9444045215

Fr.K.John Kumar
Director,Social Watch – TN
Email: kumar@swtn.org
Mobile : 9444469685



202, Chitra Avenue, Shopping Inn, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. Tamil Nadu, India.
Phone : 0091 - 44 - 2374 6044, E-mail : krisjkumar2000@gmail.com Web : www.swtn.org

# SOCIAL WATCH - TAMILNADU

Date : 16.06.2021

To

Thiru. ............
Collector

Dear Collector,

We congratulate you for assuming the post of Collector.

Since new officers have taken over collectorship in the Districts, we are addressing you for your positive contribution towards SC and STs. Several of them are mandated by statues and not by executive instructions alone.

Please

1. Conduct 'Vizhikann' (விழிகண்) meetings once a quarter as per 1989 PA Act. Please ensure that 'Mistake of Fact' is not approved as a matter of routine. Make the non – official members more aware by furnishing monthly reports to them. Please examine the validity of counter cases filed.
2. Please publish the list of atrocity prone villages of your District as well as the perspective plans prepared for these villages.
3. In the monthly Plan review meetings please review SCSP/TSP schemes meaningfully. The relevance or otherwise of these schemes may be pointed out to the Secretary ADTW as well as the respective Secretaries.
4. Please publish the establishment list of Revenue and Rural Development Departments of your district regularly. Please do not concede to the demand of preparation of 'Temporary DT Panels' and do not leave any SC/ST slots unfilled.
5. Please conduct a meeting for SC/ST employees every quarters as per **Go 65 ADTW dated 9.4.1997**
6. Ensure house cites to all STs.
7. Implement '2006 STs Forest Rights Act' in true letter and spirit.



202, Chitra Avenue, Shopping Inn, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. Tamil Nadu, India.
Phone : 0091 - 44 - 2374 6044, E-mail : krisjkumar2000@gmail.com Web : www.swtn.org

We politely refrain from mentioning inadequacies in the implementation of the above aspects, in the hope that you know them well and also possess the capacity and inclination to do the best for SC/STs.

Wishing you all the best

**Dr. R.CHRISTODAS GANDHI, IAS (Rtd)**
**President,PAALAM**
Email: rcg1952@gmail.com
Mobile: 94440 45215

**Fr.K.John Kumar**
**Director, Social Watch - TN**
Email: kumar@swtn.org
Mobile: 94444 69685

அன்புகெழுமிய மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களுக்கு,

வணக்கமும் வாழ்த்துக்களும்

தாங்கள் புதிதாகப் பொறுப்பேற்றமைக்கு வாழ்த்துக்கள்.

மாவட்டங்களுக்குப் புதிய ஆட்சித் தலைவா்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் பட்டியல் இனத்தவருக்கு நீங்கள் நல்லது ஆற்ற வேண்டும் என வேண்டிக் கொள்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவா் பட்டியல் இனத்தவா்க்கு ஆற்ற வேண்டிய பணிகளில் பல சட்டப்படியானவை; வெறும் நிா்வாகக் கட்டளைகளைத் தாண்டியவை.

தயவுடன்,

1. 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் கீழான 'விழிகண்' கூட்டங்களைக் காலாண்டுக்கு ஒருமுறை நடத்த வேண்டுகிறோம். அலுவல்சாரா உறுப்பினா்களுக்கு மாத முன்னேற்ற அறிக்கையை அனுப்பி, 'மெய்த்தன்மை அற்றது' (Mistake of Fact) என வழக்குகளைச் சா்வ சாதாரணமாகத் தள்ளுபடி செய்வதை நிறுத்த வேண்டுகிறோம். Counter Case போடப்படுவதற்கு உண்மையிலே காரணம் உள்ளதா என்பதைக் கண்டறிந்து இந்த வழக்கத்தையும் நிறுத்த வேண்டுகிறோம்.

2. வன்கொடுமை விராவிய ஊா்களின் பட்டியலை மாவட்டத்தில் வெளியிட வேண்டுகிறோம் அவ்வூா்களுக்கு உருவாக்கப்படும் திட்டங்களையும் வகுத்துப் புலப்படுத்த வேண்டுகிறோம்.

3. திட்ட ஆய்வுக் கூட்டங்களில் பட்டியல் இன/பழங்குடித் துணைத் திட்டங்களைத் தவறாது ஆய்விட வேண்டுகிறோம். இத்திட்டங்களுக்குத் தேவை உள்ளதா என்பதையும் ஆதிநல செயலருக்கும் உரிய துறைச் செயலருக்கும் தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

4. வருவாய் மற்றும் வளர்ச்சித் துறை மாவட்டப் பணியாளர் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட வேண்டுகிறாம். தற்காலிகப் பதவி உயர்வுப் பட்டியலைத் தயாரிக்கத் தரப்படும் அழுத்தங்களையும் பொருள்படுத்தாதீர்கள். பட்டியல் இனத்தவரது இடங்கள் முழுமையாக நிரப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டுகிறோம்.

5. அ.ஆ.65 ஆதிநல 9.4.1997 இன்படி பட்டியல் இன அலுவலர்க்கான 'பற்றாளர்' கூட்டங்களைத் தவறாமல் நடத்துங்கள்.

6. அனைத்துப் பழங்குடியினர்க்கும் வீட்டுமனையும் வீடுகளும் தரப்படுவதை உறுதி செய்யுங்கள்.

7. 2006 பழங்குடி வனஉரிமைச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றித் தாருங்கள்.

மேற்கண்ட நடவடிக்கைகளில் இதுவரை இருந்துவரும் சுணக்கங்களைச் சுட்டிக் காட்டுவதை நாகரிகம் கருதித் தவிர்க்கிறோம். நீங்கள் நல்லவர், வல்லவர் என்று நாங்கள் நம்புகிறோம். உங்களால் பட்டியல் இனத்தவர்க்கு நன்மை உண்டாகட்டும்.

வாழ்த்துடன்


இரா.கிருத்துதாசு காந்தி இ.ஆ.ப. (ஓய்வு),
முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிறுவனர் – பாலம், அம்பு
மின்னஞ்சல்: rcg1952@gmail.com
அலைபேசி: 94440 45215

அருட்பணி.கி.ஜான் குமார்,
இயக்குநர்,
சமூகக் கண்காணிப்பகம் – தமிழ்நாடு
மின்னஞ்சல்: kumar@swtn.org
அலைபேசி: 94444 69685